1442

1442

பல டிராமா நடிகர்களும் நடத்திவரும்

சம்பூர்ண

# ஸ்ரீ பக்த பிரஹ்லாதா.

சென்னை: முத்தியாலுப்பேட்டை, பாலசந்த்ரசரபக்கலி.



V A. தியாகராஜ செட்டியாரவர்கள் இயற்றியது.

[சென்]னை : முத்தியாலுப்பேட்டை,
[V A. தியாக]ராஜ செட்டியார் பதிப்பு.
1934. [விலை அணா 4

O-2 ~~mrc~~, P
N34,
149218.

ஸ்ரீ நரசிங்கன் துணை.

S. G. சுப்பைய்யா அய்யர், S. G. செல்லப்ப அய்யர்,
S. G. கிட்டப்பா, P. S. வேலு நாயர், T. S. பரமேஸ்வர
அய்யர், P. S. கோவிந்தன்,
மதுரை பால மீன ரஞ்சினி சங்கீத சபையார்,
ஆலந்தூர் ஒரிஜினல் இந்து டிராமாடிக் கம்பேனியார்
ஸ்ரீ கிருஷ்ண ரஞ்ஜித நாடக சபையார்
ஸ்ரீநிவாசப்பிள்ளை கம்பேனியார்
இன்னும் பல நடிகர்களும் நடத்திவரும்

21 DEC 1934

# ஸ்ரீ பக்த பிரஹ்லாதா.

இவை
நாடகாசிரியர்:—
சென்னை: முத்தியாலுப்பேட்டை,
பாலசந்தச்சரபக்கவி
V. A. தியாகராஜ செட்டியாரவர்களால்
இயற்றப்பெற்று.

மேற்படி சென்னை
**V. A. தியாகராஜ செட்டியாரவர்களால்**
பிரசுரிக்கப்பெற்றது.

காபிரைட்] 1934 [விலை அணா 4

149218



V. A. TYAGARAJA CHETTIYAR

2758
874 812

# ஆசிரியன் வாசகம்.

ஸ்ரீ விஷ்ணு பக்தர்களாகிய ஆழ்வாராதிகளின் திவ்ய சரித்திரங்களில் ஒன்றாகிய இப் பிரஹ்லாதாழ்வானின் சரித்திரத்தை காணாதார் ஒருவருமுளார். இச் சரிதை நவரசம் ததும்பும் நாடக வகைகளில் ஒன்றாகும். இவ்வரிய சரிதையை, முன்னோர்களின் காலத்திருந்து இப் பூதலத்தினிடமாக பல நாடக நடிகசிகாமணிகள் செவ்வனே நடத்தி நற்புகழுற்றதாகவும் கேள்வியுற்றிருக்கின்றேன். தவிர, எனது சிறுவயதில் பல டிராமா கம்பெனியார்களும், பாய்ஸ் கம்பெனியார்களும், பல சபையோர்களும் வெகு விமரிசையுடன் நடிக்கவும் கண்காணித்துள்ளேன். ஆயினும், அதுபோன்று தற்போது ஒருவரும் நடத்துவதாக காணேன், தவிர இவ்வரிய சரித்திரத்தை வரையும்படி நமது நண்பர்களும், சீடர்களும், சில வருடங்களாக வற்புறுத்தியும், இது நாள் வரை நமக்கு இது விஷயத்தில் சந்தர்ப்பம் கிடைக்காது தற்போது, நமது நாடக நண்பர்களின் மனதை பரவசத்தி லாழ்ந்தச் செய்யும்பொருட்டு வெகு ஆற்றலுடனும் அமைதியுடனும், இந் நாடகத்திற்குத் தக்கபடி, சீன், இடம், இதுகளைத் தெளிவுற வமைத்து பொருத்தமான பல புதிய வர்ணமெட்டுகளால் பாடல்களையும், பாடல்களுக்குகந்தபடி வசனங்களையும் எனது சிற்றறிவிற் கெட்டியவாறு ஆங்காங்கமைய வரைந்து, யானே வெகு சிரமத்துடன், வெளியிடப்பெற்றுள்ளேன். ஆயினும், இந்நூலைக் கண்காணிக்கும் எனதன்பார்ந்த நண்பர்களும், நாவலர், பாவலர், நாடக நிபுணர்களும் இதில் பலவித பிழைகளைக் காணினும், எனது பிழைகளை மனுத்து ஆட்கொண்டு, இந்நூலை ஆதரிப்பதும் தவிர. இதின் பதிப்புகள் பல வெளி வந்துலவவும், இச் சிறியேனின் பெயர் மேனுக்குமேலாக ஜெகமுற்றுமோங்கவும், இது போன்ற இன்னும் அனேக சரிதைகளை வரையவும் ஊக்கமளித்து, பாதுகாப்பாரென்பது நமது கொள்கை.

இப்படிக்கு,

சென்னை: V. A. தியாகராஜன்,

நாடகாசிரியன்.

# நாடக பாத்திரம்.

| | | | |
|---|---|---|---|
| 1 | ப்ரஹ்லாதன் | ... ... | ஓர் விஷ்ணு பக்தன் |
| 2 | ஹிரண்யகசிபு | ... ... | ப்ரஹ்லாதனின் தந்தை |
| 3 | ஹிரண்யாக்ஷகன் | ... ... | ஹிரண்ய கசிபுவின் சகோதரன் |
| 4 | லீலாவதி | ... ... | ஹிரண்யகசிபுவின் மனைவி |
| 5 | நாரதர் | ... ... | ப்ரம்மபுத்திரர் |
| 6 | ப்ரம்மன் | ... ... | விஷ்ணுவின் புதல்வர் |
| 7 | நரசிம்மமூர்த்தி | ... | விஷ்ணுவின் அவதார உருவங்கள் |
| 8 | வாரகமூர்த்தி | ... ... | |
| 9 | தேவேந்திரன் | ... ... | அமரர்கோன் |
| 10 | சுக்ராச்சாரி | ... ... | அசுர குரு |

மற்றும்,

பூமாதேவி, மாணவர்கள், சேவகர். தூதுவர், மந்திரிகள், சகிகள். பாம்பு பிடாரன், அக்கினி பகவான் முதலானோர்.

## நாடகம் நிகழுமிடம்.

ப்ரஹ்லாதன் பள்ளியில் வாசிக்கு மிடத்திலும்,

ப்ரஹ்லாதனை ஹிரண்யன் பலவித ஆக்கினை புரியுமிடத்திலும்,

ப்ரஹ்லாதனுக்கு லீலாவதி பாலில் விஷம் கலந்தளிக்கு மிடத்திலுமாம்.

# ரிஜிஸ்டர் அறிக்கை.

இதனால் எனதன்பார்ந்த புத்தக வியாபார நண்பர்களுக்கும், மற்றும் கவிராஜ வித்வ சிரோன்மணிகளுக்கும் அடியிற் கண்டுள்ள சிறியேன் தெரிவித்துக்கொள்ளும் விண்ணப்பமாவது யாதெனில், இந்த ஸ்ரீ பக்த பிரஹ்லாதா சரித்திரத்தைஎன்னால்பலநூதன வர்ணமெட்டுகளால் வரையப்பெற்று கவர்ன்மெண்ட் சட்டப்படி ரிஜிஸ்டர் காபி ரைட் செய்து யானே பிரசுரித்துள்ளேன். ஆதலால், இந்த டிராமாவிலுள்ள பாடல்களையாவது வசனகாவியங்களையாவது மற்றும் வேறு விதமாக மாற்றியாவது அச்சிடுவோரேல் இதனாலுண்டாகும் நஷ்டங்களுக்குள்ளாவதன்றி கவர்ன்மெட்டு கிரிமினல் குற்றத்திற்கும் ஈடுபடுவார்களென இதனால் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,

**V. A. தியாகராஜ செட்டியார்,**

1/105, பிராட்வே, மதராஸ்.

ஸ்ரீ

ஸ்ரீ நரசிங்கன் துணை.

பலநாடக ஆக்டர்களாலும் நடத்திவரும்

# ஸ்ரீ பக்த பிரஹ்லாதா.

## வேழைமுகன் துதி வெண்பா.

பக்தியிற் சிரந்த ப்ரஹலாதன் சரிதை
இக்கா ருலகினி லியம்புதற்கு—முக்கண்ணன்
புத்திரனே வேழைமுக புண்ணியனே மைந்தனுனை
நத்தினேன் வாமதனை நல்கு.

சீன்:—1.] [இடம்:—கடற்கறை.

கதாநாயகர்:—ஹிரண்யாக்ஷகன், பூமாதேவி,

[ஹிரண்யாக்ஷகன் பூமியைச் சுருட்டி சமுத்திரத்திற்குள் செல்கிறான், பூமாதேவி அலறிகூச்சலிடுகிறாள்.]

## பூமாதேவி கண்ணி.

வெற்றிலையை கொடுத்துவிட்டு போன என்ற மெட்டு.

அபயமபய மென்னை ஆதரிக்க வருவாய் அண்ணா
அகிலந்தனை பாய்போல அரக்கன்சுற்றி ஏகினான் அண்ணா
அரிஹரி ஆதிமூலா அபலைபோல் நிற்கலானேன் அண்ணா
ஆதார மேதுமில்லை நீதான் காப்பாற்றவேணும் அண்ணா
பொல்லா ஹிரண்யாக்ஷகன் புவியை சுருட்டி சென்றான் அண்ணா
பூபாலனே துயரை கோபாலனே நீ தீர்ப்பாய் அண்ணா (அ)

பூமாதேவி. வ-ம்:—ஹா! அண்ணா! அரிஹரி! அடியேனினி யாது செய்யப்போகின்றேன் அரக்கனாகிய இரண்யாக்ஷகன் பூமியைப் பாயாக சுருட்டி எடுத்து கடலுக்குள் ஓடி ஒளித்துக் கொண்டானே இனியான் எவ்விதமாக உயிர் வாழ்வேன் அபயமென்றவர்க்கிரங்கும் ஆதிகேசவா! அபலையாகிய எனது துயரை நீ தான் ஒழிக்கவேண்டும்.

[பூமாதேவி புலம்பிக் கொண்டிருக்கும் சமயம் விஷ்ணு பகவான் வராக ரூபங்கொண்டு சமுத்திரத்திற்குள் புகுந்து இரண்யாக்ஷதனை மடித்து பூமியை எடுத்து வந்து பூமாதேவியிடம் சேர்த்து மறைகிறார்.]

சீன்:—2.] [இடம்:—அந்தபுரம்.

கதாநாயகர்:—ஹிரண்யகசிபு, லீலாவதி, தூதுவர்.

[லீலாவதி அந்தப்புரத்தில் தனிமையாக அமர்ந்திருக்கின்ருள், ஹிரண்யகசிபு வருகிருன்.]

## ஹிரண்யகசிபு தரு.

அண்டத்துயர்க்கதிபன் என்றமெட்டு.

பல்லவி

அசுரர்களுக்கு இறைவன்—அண்டாண்டமும்
அலரச்செய்திடு மதிபன் (அ)

அநுபல்லவி.

அரியரன் நான்முகனும் அமரர் பலப்பேர்களும்
அறிந்தாலெனது பெயர் அங்கந்துடிக்கச்செய்யும் (அ)

சரணம்.

தேவர் முனிவர்களும் தெரிந்தாலெனது சேதி
தெண்டம் புரிந்து ஓடி விடுவார் இந்த
தேசமெட்டு திக்கிலும் தீரனெனவே யென்னை
தினமும் மகிழ்ந்து கொண்டா டிடுவார்
ஈவிதக்க மில்லாத ஹரண்யகசிபு யானே
பூவினிலே தியாகன் மொழி போலவே இங்கு வந்தேனே (அ)

ஹிரண். வ-ம்:—கண்மணி! லீலா! ஏனிப்படி ஒருவித முக வாட்டத்துட னமர்ந்திருக்கின்ருய்? உனக்கென்ன அப்படிக் கொற்ற குறை ஏற்பட்டுவிட்டது?

லீலா. வ-ம்:—பிரணகாதலா! இந்த ஈரேழு பதினுன்கு லோகங்களுக்கும் கர்த்தராக விளங்காநின்ற தாங்களிருக்கும்வரை இவ்வடியாளுக்கு யாதுகுறை ஏற்படப் போகின்றது?

ஹிரண். வ-ம்:—கண்ணே! பின் எதற்காக ஒருவித களைப்புடன் அமர்ந்திருக்கின்ருய்?

லீலா. வ-ம்:—பிராணபதி! வேறொன்று மில்லை, ஏதோ ஒரு விதமாக எனதுதிரேகம் களை மேலிடுவது பற்றியும், தவிர பிற்காலத்தில் நமது பெயரை நிலை நாட்டுவதற்கு ஒரு மதலைப்பே றில்லையே என்றும் குறையே யொழிய வேறில்லை.

ஹிரண். வ-ம்:—ப்ரிய சகி! நமக்கு புத்ரபாக்ய மிருக்குமாயின் அது நம்மைவிடாது ஆயினும் அதுபற்றி வருந்துவதில் பயனொன்று மில்லை, (சற்று கவனித்து) ஆ! என்னஇது ஏதோ ஒருவித அபயக் குறல் கேட்கின்றதே? யாவும் உள்ளேவரட்டும் சங்கதி தெரிவித்துக் கொள்ளலாம்.

[தூதர்கள் கூச்சலிட்டு ஓடிவருகின்றனர்.]

தூதர். வ-ம்:—ஆ! அரசே! இனியென்ன செய்யப்போகின்றோம், சொல்லவும் வாய் குளறுகின்றதே.

ஹிரண். வ-ம்:—சட்! மடையர்களே! ஏனிப்படி கூச்சலிடுகின்றீர்கள். இந்த அதல சுதல விதல தராதல பாதாளமென்னும் ஈரேழுபதினான்கு லோகத்திலுமுள்ள தேவர் முனிவர் மானிடர் யாவருக்குமே அஞ்சாத என் தம்பியாகிய இரண்யாக்ஷகனிருக்க, அதுபோலவே புஜபல மிகுந்த யானிருக்க உங்களை யார் என்ன செய்தவர்? இப்பொழுதே உரையுங்கள், அன்னவனை இதோ என் கரத்திலிருக்கும் கட்கத்திற்கு இரையாக செய்கிறேன்.

தூதர். வ-ம்:—ஐயனே! எங்களை ஒருவரும் ஒன்றும் செய்யவில்லை. ஐயோ! சேதியை யுரைக்கவென்றால் எங்களின் நாவு தடுமாறுகின்றதே?

ஹிரண். வ-ம்:—என்னடா இது? கசடர்களே! பிறகு ஏன் கூச்சலிட்டு வந்தீர்கள்? என்ன மிரள மிரள விழிக்கின்றீர்கள்? சீக்கிரம் சங்கதியை வெளியிடுங்கள்.

தூதர். வ-ம்:—தங்களின் சகோதரரிருக்கின்றாரே இரண்யகசிபு, அவர் பூமியை அப்படியே பாயாக சுருட்டி எடுத்து சமுத்திரத்தினுள் கொண்டு சென்று விட்டார்.

ஹிரண். வ-ம்:—சபாஷ்! எனது தம்பியின் சாமர்த்தியமே சாமர்த்தியம். இனி பூமியைச் சுமந்திருந்த பூமாதேவி மடிய வேண்டியதுதான் ஓர் சங்கடம் ஒழிந்தது. பிறகு ஏதேனும் விசேடம் வுண்டா?

மற்றொரு தூதன். வ-ம்:—ஐயோ! ராஜகெம்பீர வீரதீர உத்தண்ட குணாகார! விசேஷத்தை என்னவென்று சொல்வோம், தங்களின் சகோதரர் பூமியை சுருட்டி எடுத்துச் சென்றதும், அப்பாதகி பூமாதேவி அலறி கூச்சலிட்டு புலம்பினாள்.

ஹிரண் வ-ம்:—அவள் புலம்ப வேண்டியதுதான் மற்றும் அவள் என்ன செய்ய முடியும்?

தூதன். வ-ம்:—பின்னும் கேளுங்கள், அன்னவள் புலம்பிய முறைக்கிறங்கி அக்கள்ளப்பயலாகிய கார்மேகவண்ணன், ஒரு பன்றிபோல் ரூபங்கொண்டு சமுத்திரத்திற்குள் புகுந்து தங்களின் சகோதரருடன் சண்டையிட்டான்.

ஹிரண். வ-ம்:—என்ன? அச் சண்டாள கார்மேகனும் மடிந்தானா? ஒழிந்தது சனியன், இனி நமக்கு ஒருவரும் நிகரில்லை.

தூதன். வ-ம்:—ஐயோ? மகாராஜா! இல்லை! இல்லை!! அப்பாதகன் தங்களின் சகோதரரைக் கொன்று வீழ்த்திவிட்டான்.

ஹிரண். வ-ம்:—ஹா! என்ன? எனது தம்பியையா? மடித்துவிட்டானா? ஆ! தம்பி!

காந்தியோ பரம ஏழை என்ற மெட்டு.

ஐயையோ தம்பி அதி பலத்தோனே
யாரு மெதிரில்லாத ஆண்மை யுள்ளோனே
வையகமெங்கும் புகழ் வகித்த சீமானே
வல்லுயிரைத் துரக்க வழகோ கோமானே (ஐ)
சண்டாள ஹரி சதி நினைவாலே
சமர்புரிந்து மாண்டாயோ தரணியின் மேலே
அண்டமதி லெந்தனை அகற்றி இந்நாளே
ஆவிதனைத் துறந்தாய் அகதியைப் போலே (ஐ)
புஜபல வீரம் பொருந்தாது போச்சே
புண்டலீகன் கரத்தால் மாண்டிட லாச்சே
துஜங்கட்டியாளுமெந்தன் சௌரியம் போச்சே
துன்பமிகுச் செய்தி தெரிந்திட லேச்சே (ஐ)

ஹிரண். வ-ம்:—பாதகன் ! அவ்வளவு நெஞ்சம் துணிவையா கொண்டான் ? ஆ ! ஹா ! ஹா ! என்னதைரியம் ? இனி அச்சண்டாளனை விடுவதில்லை, எப்படியேனும் அப்பாதகனை கொல்லவே முயற்சி செய்கிறேன். இப்பொழுதே யான் சென்று நான்முகனை வேண்டி தவம்புரிந்து,

கோண்டுவா கோண்டுவோ கருடா என்ற வர்ணமெட்டு.

வரமது பெற்றுவருவேன் இந்த
வானுலகி லுள்ளபேரை மானபங்கமே புரிய (வ)
திரமாய் வரத்தைப்பெற்று திருட்டு ஹரியவனை
இறக்கச் செய்யாவிடிலே ஹிரணிய னல்லயானே (வ)

ஹிரண். வ-ம்:—அடே தூதர்களே ! இப்பொழுதே யான் சென்றுவரம்பெற்று வருகிறேன், நீங்கள்சென்றுஒவ்வொருகானகத்திலும் தபசு புரியும் விஷ்னு மகத்தினர்களை அடித்துத் துரத்தி ஆலாகோலப் படுத்திவிடுங்கள், இனி எவராயினும் நெற்றியில் நாமமிட்டிருக்கக் கண்டால் உடனே அவர்களை சேதித் தெரியுங்கள், கண்மணி ! லீலா ! யான் சென்று வருகிறேன், நீ உனது சகிகளுடன் அரண்மனையிலேயே இரு.

லீலா.வ-ம்:—நாதா ! யானோ இரண்டு மாதம் காப்பவதியாக இருக்கின்றேன் அதின் பொருட்டுதான் முன்னமே ஒருவாறு வாட்டமுற்றிருந்தேன் ஆதலால் நீங்கள் சென்று சீக்கிரம் வந்துவிடுங்கள்.

சீன்:—3.] [இடம்:—யாகசாலை.

கதாநாயகர்:—விஷ்னுபக்தர்கள், ஹிரண்யனின் தூதர்கள்.

[விஷ்னு பக்தர்கள் பூஜித்திருக்கிறார்கள்
தூதர்கள் அடித்துதுரத்துகின்றனர்.]

பக்தர். வ-ம்:—ஹா ! அரி ஹரி ! அரி ஹரி ! [ஓடுகிறார்கள்.]

சீன்:—4.] இடம்:—மலையடர்ந்த கானகம்.

கதாநாயகர்:—ஹிரண்யகசிபு, பிரம்மதேவன்.

[ஹிரண்யன் தபசு புரிகின்முன், பிரம்ம தேவன் ப்ராப்தமாகின்ருர்.]

பிரம்மன். வ-ம்:—ஹே! ஹிரண்ய கசிபு! உனது தவத்திற்கும், பக்திக்கும் மெச்சினேம், உனக்கென்ன வரம்வேண்டும்? சீக்கிரம் கேள் தருகிறேன்.

ஹிரண். வ-ம்:—நான்முகத் தேவா! நமஸ்கரிக்கின்றேன். அதாவது, எனதுயிர் காலையிலும் போகப்படாது, மாலையிலும் போகப்படாது?

பிரம்மன். வ-ம்:—அப்படியே அளித்தேன்.

ஹிரண். வ-ம்:—யான் இரவிலும் மாளப்படாது, பகலிலும் மாளப்படாது?

பிரம்மன். வ-ம்:—அளித்தேன், மற்றும் என்ன வேண்டும்?

ஹிரண். வ-ம்:—யான் வீட்டிலும் மாளப்படாது, வீட்டின் வெளிப்புறத்திலும் மாளப்படாது?

பிரம். வ-ம்:—அளித்தேன்! அஞ்சாதே.

ஹிரண். வ-ம்:—காட்டிலும் எனதுயிர் பிரியப்படாது, நாட்டிலும் எனதுயிர் பிரியப்படாது.

பிரம். வ-ம்:—அளித்தேன் இன்னும் என்ன வரம்வேண்டும்?

ஹிரண். வ-ம்:—நான்முக தேவா! தேவர்களாலும் எனக்கு மரணமேற்படக்கூடாது அசுரர்களாலும் மரணமேற்படக்கூடாது.

பிரம். வ-ம்:—அப்படியே கொடுத்தேன்.

ஹிரண். வ-ம்:—மனிதர்களாலும் மரணமேற்படக்கூடாது, மிருக ராசிகளாலும், மற்றும் விஷ ஜந்துகள் முதலியவற்ருலும் யான் மாளப்படாது.

பிரம். வ-ம்:—ஹிரண்யகசிபு! உன் மனப்படியே நீ கோரிய வரங்களனைத்தும் அளித்து இன்னும் யாது வரம்வேண்டும் கேள் தருகிறேன்?

ஹிரண். வ-ம்:—எல்லாம் தீர்ந்தது ஆனல் நீ என் தர்பாருக்கு வரவேண்டும்.

பிரம். வ-ம்:—என்ன இது? யான் எதற்காக வரவேண்டும்?

ஹிரண். வ-ம்:—நான் தர்பாரின்மீது அமர்ந்திருந்தால் நீ ஒரு பக்கமாக கீழே அமர்ந்து எனக்கு பணிவிடைப் புரிவதுடன், அப்போதைக்கப்போது வருங்காலம், நிகழ்காலம், சென்றகாலம் இதுகளைத் தெரிந்துரைக்கவேண்டும். வருகின்றனையா என்ன? இப்பொழுதே உன்னை ஒரே அரையில் அந்தகனுலகிற்கனுப்பிவிடுவேன்.

பி. வ-ம்:—அப்பா! கோபியாதே! உன் மனப்படியே வருகிறேன்.

[ஹிரண்யகசிபு பிரம்மதேவனையும் அழைத்துக் கொண்டு தனது நகரை நோக்கிவருகிறான்.]

சீன்:—5.] [இடம்:—தேவேந்திரன் தர்பார்.

கதாநாயகர்:—தேவேந்திரன், மந்திரி, சேவகன் முதலானோர்.

[மந்திரி முதலானோர் அமர்ந்திருக்கின்றார்கள் தேவேந்திரன் வருகிறான்.]

## தேவேந்திரன் தரு.

ஏனே சந்தேகமினியே என்ற மெட்டில் அனுபல்லவி வேறு.

அநுபல்லவி

நம்பும் பக்தர்கள் துதி நந்திவாகன மேறும்
உம்பர் மகிழ் பரம தம்பிரானே தினமும்
உனதிருபதம் பணிந்தேன் அடியேனொரு
வரமதை பெற நினைந்தேன் சடையிலிளம்
பிறையதை முறையுடன் குறைவிலா தரித்தவா
அரையினில் நாகமே ஆடையா யுடுத்திய
வேதா உமையவள்
நாதா எந்தனின்
மீதா இன்னமும்
வாதா அதி சிறு
நரியை பரியாக்கிய நாகபாணி யுனையே
பரிவுடன் தியாகராஜன் பணிந்தேன் காருமெனையே

பல்லவி.

சம்போ சங்கா சிவனே—அருள்
சதுர்மறை புகழதி பதிநிதம் துதிபெரும் (ச)

இந்திரன். வ-ம்:—மந்திரி! நமது சபையினிடமாக அனைவர்களும் விஜயஞ் செய்துள்ளார்களா?

மந்திரி. வ-ப்:—அமரர்களனைவர்களுக்கும் அதிபராக விளங்கா நின்ற அமரேந்திரா! தங்களின் மனக்கொள்கைபடியே அனைவரும் விஜயஞ் செய்துள்ளார்கள்.

இந்திரன். வ-ம்:—சபாஷ், சந்தோஷம்! ஆயினும், பூலோகத்தினிடமாக, சண்டாள ஹிரண்யகசிபு அமரர்களின் கூட்டத்தையே அடியோடு துலைத்துவிடவேண்டுமென்னும் கொள்கையைக்கொண்டு நான்முகனை நோக்கி தபசு புரிகின்றான், அன்னவன் மனைவியோ பூர்ண கர்ப்பவதியாக அரண்மனையிலிருக்கின்றாள். அன்னவள் வயிற்றிலிருக்கும் குழந்தை பூமியை நோக்கி பிறக்குமானால் பிறந்த சில காலத்திற்கெல்லாம் நம்மை எக்கதிக் கீடாக்குமோ? ஆதலால், அப்பாதகன் வருவதற்குள் அவன் மனைவியை எப்படியேனும் இவ்வமாராபதிக்கு இழுத்து வந்து சிறையிலடைத்து விடுகிறேன். அனைவரும் ஜாக்கிரதையுட னிருங்கள். [போகிறான்.]

சீன்:—6.] [இடம்:—லீலாவதி அந்தபுரம்.

கதாநாயகர்:—லீலாவதி, இந்திரன், நாரதமுனிவர்.

[லீலாவதி அந்தபுரத்திலமர்ந்துக்கொண்டு தனது நாதன்வராது பற்றி சிந்திக்கின்ருள்.]

## லீலாவதி தரு.

கதர்கப்பல் கோடி தோனுதே என்ற மெட்டு.

பல்லவி

கண்களிரண்டும் தேடுதே
காதலர் வந்திடாத காரணத்தினு லெந்தன் (க)

அநுபல்லவி

என்னைத்தனி விடுத்து எதிர்த்து மனம் பதைத்து
தன்மைதனை யொழித்து தான்சென்றனர் மறுத்து (க)

சரணம்

எவர்களுடனே யுத்தம் எதிர்த்து புரிகின்ருரோ
அவரெந்தன் நாதன்தன்னை அடித்து மடித்திட்டாரோ
அறியேனே மர்மம்
தெரியேனே கண்ணீர்
சொரிந்தேனே
சதிக் குள்ளாகி யான் நின்றேனே (க)

லீலா. வ-ம்:—ஐயோ! என்நாதன் சென்று அனேக காலமாகின்றது, யானே பூரண கற்பவதியாக இருக்கின்றேன் பிரசவ காலமும் நெருங்கிவிட்டது, என்நாதனைக் காணுமல் என்மனது தவிக்கின்றது, கண்களும் தேடுகின்றது, இன்னும் சிலநேரம் பார்க்கலாம்.

[இதற்குள் தேவேந்திரன் வருகிருன்.]

இந்திரன். வ-ம்:—பெண்ணே! லீலாவதி! உனது நாதன் உன்னை அழைத்து வாச் சொன்னுர் சீக்கிரம் புரப்படு. !

லீலா. வ-ம்:—என் காதலர் எங்கே இருக்கின்ருர்? ஐயோ என்னை அவர் ஏன் அழைக்கவேண்டும்?

இந். வ-ம்:—பெண்ணே! வரம்பெற்று வருவதற்காக சென்ற உன்நாதன் கடவுளைநோக்கி தபசுபுரிய, கடவுள் பிராப்தமாகி ஒருவனுக தபசுபுரிந்தால் வரந்தர முடியாது என்றும், மனைவியுடன் தபசுபுரிய வேண்டுமென்றும் தெரிவித்தபடியால் உன்னையும் அக்கதியிலீடுபடுத்த அழைத்து வரும்படி எனைஏவினுன். ஆதலால், வா சீக்கிரம்.

லீலா. வ-ம்:—எனது காதலர் அவ்விதமாக எனை ஒருபோதும் அழைத்துவர ஏவார், இதில் ஏதோ சூது இருக்கின்றது ஆதலால் யான் வரமுடியாது.

இந். வ-ய்:—சட் ! பாதகி ! என் வார்த்தையுமா தட்டிப் பேசுகின்றாய்.

வலைதப்பிய குறமான்களே என்ற மெட்டு.

என்னடி தளுக்குகள் காட்டுராய் என்னை
எதிர்த்து எதிர்த்து பேசி நீட்டுராய்
துன்மார்க்கனுன் நாதன் தந்தபல மிதோ
ஒன்று மறியாத உத்தமி போலேதோ (எ)

லீலாவதி ஷை மெட்டு.

மம்மதை கொள்ளாதே மூடனே உந்தன்
மானம் போகும்மென்னால் கேடனே
தன்மை யறியாது தைரியமாய் வந்து
மன்னவனில்லாத மர்மமதை யறிந்து (ம)

தேவேந்திரன் ஷை மெட்டு.

மட்டிச் சிரிக்கிபோல் பேசுவாய் வெகு
மார்க்க மறிந்தார்போல் ஏசுராய்
எட்டிச்சிகை பிடித்து இழுத்துச் செல்வேனடி
பட்டியே இனியார்க்கும் பயப்படேன் யானடி (எ)

லீலாவதி ஷை மெட்டு.

ஐயையோ இதுயென்ன தொல்லையோ இந்த
அனியாயத்தைக் கேட்பா ரில்லையோ
செய்யொணு காரியம் செய்யத் துணிந்தானே
சீலன் தியாகராஜன் சாற்றும் படிதானே (ம)

இந். வ-ய்:—பாதகி ! இனிஉனை எக்காரணத்தைக் கொண்டும் விடுவதில்லை ஜல்தியில் நட.

[இந்திரன் லீலாவதியை சிகையைபிடித்து இழுத்துச் செல்கிறான் இதற்குள் நாரதர் வருகிறார்.]

நாரதர் விருத்தம். இராகம்—மோகனம்.

பதராதே இந்திராநீ பழியதை மனதில்கொண்டு
சிதரிய மதியினாலே சிகையதை பிடிக்கலாமா
இதமுட னிவள்வயிற்றில் இரணியன் தன்னைநாளை
அதமது புரிந்துகொல்ல அருஞ்சுதன் ஜெனிப்பான்வேந்தே

இந். வ-ம்:—இந்திரா ! பதராதே ! பதராதகாரியம் சிதராது, பாதக ஹிரணியனுக்கு மரணகாலம் சமீபித்து விட்டது, அன்னவனைக் கொல்லும் பொருட்டு, பரமமூர்த்தி இவள் வயிற்றில் புத்திரனாக ஜெனித்துள்ளார், வீணில் நீ சிசுஹத்தி தேடிக் கொள்ள வேண்டாம். சங்கதி முற்றும் யான் பார்த்துக்கொள்கிறேன் நீ தெய்வபதிக்குச் செல்வாயாக. (இந்திரன் போகிறான்.) அம்மணி ! இந்திரன் அறியாது செய்த பிழையை மன்னித்துக்கொள், இச்

செய்தியை உனதாளனிடம் புகலவேண்டாம். போகட்டும், உனது நாதன் எங்கே காணவில்லையே ?

லீலா வ-ம்:—சுவாமி ! எனது பிராணகாதலர் சில நாளைக்கு முன் அன்னவரின் சகோதரரை எவனோ ஹரியென்பவன் கொன்று விட்டானும், அவனை கொல்வதற்காக வரம்பெற்றுவரச் சென்றிருக்கின்றார், அன்னவரும் வருங்காலம் நெருங்கிவிட்டது.

நாரதர். வ-ம்:—தாயே ! என்னஇது ஆச்சரியம் ? சிங்கத்தைச் சுண்டெலி எதிர்த்தது போலிருக்கின்றதே ? ஐயோ ! அந்த ஹரியின் சமர்த்தை உனது காதலன் என்னவென்று நினைத்துக் கொண்டான் அன்னவரின் பெருமையையும் இப் புவியின்கண் அறியாத மானிடர்களும் உளார்களா ?

லீலா. வ-ம்:—என்ன சுவாமி! எனது நாதனின் புஜபலபாராக்கிரமத்திற்க் கெதிரியாக யார் நிற்கமுடியும். அந்த ஹரியென்ன எவ்வளவு சாமர்த்திய முள்ளவன் ?

நாரதர். வ-ம்:—அம்மணி ! தெரிவிக்கின்றேன் கேள்.

[லீலாவதி ஓர் ஆசனத்தின்மீது சாய்ந்துக் கொள்கிறாள், நாரதர் ஒருபுரம் அமர்ந்து விஷ்ணுவின் பெருமையை தெரிவிக்கின்றார்.]

## நாரதர் தரு.

### கந்தன் தன் பெருமை என்ற மெட்டு.

பல்லவி

வைகுந்தன் மகிமை அருள்
வானவர் போற்றிடும் நாராயண னெனும் (வை)

மகுடங்கள்

வேனுகான லோலனான
தியான் மேவும் தீதிலாத (வை)

வஞ்சித்திடும் துஞ்சர்க்களை
நெஞ்சந் துடித் தஞ்சச் செயும் (வை)

வாதித் தசுரர்கள் குலமதை
சேதித் தெரியுமோர் புண்ணியன் (வை)

வாமனனாய் மாபலியை பாதளத்தில்
மூவடியா கமிதித்த மூர்த்தியான (வை)

அநுபல்லவி

பாகுசேர் லக்ஷிமியின் பகர்த்தமர் லோலன்
பார்க்கடல் மீதினில் பள்ளிகொள்ளும் சீலன்
வாகுள தேவர் வணங்கும் ஆதிமூலன்
வேண அசுரரை வென்ற கோலாகாலன்

வல்லமையாய் தொல்னுலகில்
அல்லலை யொழித்தவனும்
நல்லவர்கள் உள்ளமதில்
கள்ளமிலா சொல்லறிய (வை)

[லீலாவதி இதைக் கேட்டுக் கொண்டே நித்திரைபுரிகின்றாள், லீலாவதியின் வயிற்றிலிருக்கும்குழந்தை குறல்கொடுத்து நாரதர் சொல்வதற்கு பதிலுரைக்கின்றது.]

நாரதர். வ-ம்:—ஆ! என்ன இது? எனப்பனின் மகிமையே மகிமை. குழந்தாய்! உனது தாயிற்கு பதிலாக யானுரைக்கும் சேதியை நீயே கேட்டுக்கொள்.

ஷை மேட்டு சரணம்.

கருடவாகனமீ தேரிடும் லாவண்யன்
கண்கண்ட தெய்வமாய் கமழ்ந்திடும் புண்ணியன்
புருடோத்தம னென பெயர்தங்கிடும் தன்யன்
பூபாலர்கள் குறை போக்கு மருள் கன்யன்

பொங்கும் தங்கும் எங்கும் சங்கு சக்ரக் கையன்
இங்கிர்தரூப இணையிலாத துய்யன்
மங்கா பெயர்கொண்ட மாக்ஷிமைசேர் மெய்யன்
பங்கய பாதப்ர பாக்கியம் சேரையன்

பணிந்த தொண்டர்கள் குறையதை
கனிந்த மனதுட னகற்றிடும்
முனைந்து தியாகனின் மொழியதற்
குகந்த வரமரு ளதிபதி

ஆதிசேடன்மீ தே துயின்றிடும்
நீதிசேர் நெடு மாலென் றோதிடும்
கியாதியே மிகுந் தே துலங்கிடும் (வை)

[இதற்குள் லீலாவதி துயின்றெழுந்திருக்கின்றாள்]

லீலாவதி. வ-ம்:—சுவாமி! அடியாள் தங்களுக்கு அதிக சிரமம் வைத்து விட்டேன். மன்னிக்கவும்.

நாரதர். வ-ம்:—அம்மணி! அந்த ஹரியின் புகழை யுரைப்ப தென்றால் இன்னும் எத்தனை நாட்களுரைக்கினும் சொல்லி முடியுமா? தவிர சிரமந்தா னேற்படுமா?

லீலா. வ-ம்:—தாங்களுரைத்ததை இவ்வடியாள் கேட்டுக் கொண்டே நித்திரை புரிந்து விட்டேன், ஆயினும் மற்றொருமுறை வரும்பொழுது அதை யுரையுங்கள்.

நாரதர். வ-ம்:—அம்மணி! தாங்கள்தான் யானுரைத்தவைகளை சரிவர கேட்காதுபோயினும், யானுரைத்ததற்கு ஒருவிதத்தில் திருப்திகரமேயடைந்தேன். ஆயினும், எனக்கதிக காலஹரணமாகின்றது. யான் சென்று வருகிறேன், விடைதாருங்கள் தாயே!

லீலா. வ-ம்:—முனிவரே! தங்கள் மனதின்படியே சென்று வாருங்கள்.

[நாரதர் போகிறார், ஹிரண்யன் வருகிறான்.]

லீலா. வ-ம்:—ப்ராணகாந்தா! அடியாள் நமஸ்கரிக்கின்றேன்.

ஹிரண். வ-ம்:—பெண்ணே! லீலாவதி கல்யாண் அமர்வாய்.

லீலா. வ-ம்:—நாதா! தாங்கள் இது காலபரியந்தம் என்ன செய்திருந்தீர்? யான் பூர்ண கர்ப்பவதியாகும் வரையில் தாங்கள் என தருகிலில்லாது இத்தனை நாட்கள் சென்று வந்தீரே?

ஹிரண். வ-ம்:—கண்ணே! லீலா! யான் சென்று தவம்புரிந்து நான்முகனைக்கண்டு எனதுயிர் மடியாதிருக்க பலவிதத்திலும் வரம்பெற்று வந்ததுடன் நான்முகனையும் நமது தர்ப்பாரில் பஞ்சாங்கம் படிக்க அழைத்து வந்திருக்கின்றேன், நீயும் உனது தோழிகளும் சவுக்கியந்தானே?

லீலா. வ-ம்:—சவுக்கியந்தான். ஆயினும், இன்னுமெங்கு செல்லப்போகின்றீர்?

ஹிரண். வ-ம்:—பெண்ணே! இன்னுமெங்கும் செல்வதற்கில்லை யான் தர்பாருக்கு சென்று வருகிறேன்.

[ஹிரண்யகசிபு செல்கிறான், பிறகு சில நாளைக்குள் குழந்தை பிறக்கின்றது குழந்தைக்கு ப்ரஹலாதனென திருநாமம் சூட்டுகின்றார்கள்.]

**சீன்:—7.]** **[இடம்:—ஹிரண்யன் தர்பார்.**

கதாநாயகர்:—ஹிரண்யகசிபு, மந்திரிகள் சேவகன், பிரஹலாதன் சுக்ராச்சாரி.

ஹிரண். வ-ம்:—மந்திரிகாள்! அனைவரும் நமது சபையினிடமாக அதிஜாக்கிரதையுடனமர்ந்திருக்கின்றீர்களா?

மந்திரி. வ-ம்:—அரசே அனைவரும், வெகு ஜாக்கிரதையாகவே அமர்ந்திருக்கின்றோம்.

ஹிரண். வ-ம்—சபாஷ்! மந்திரி!

சேவலாளி தேவராஜன் என்ற மெட்டு.

ஊழியனான வருணன் வேளை தவராமலே
வருஷிக்கின்றானோ பஞ்சம் விலக நம் நகரிலே
வானவர் முதல் ஏவல்
தான்புரிந் திடல்
வழக்கம்போல் நடக்குதா வழுத்துவீர் பதில் (ஊ)

ஹிரண். வ-ம்:—மந்திரி! வருணன் மாதம் தவராது மழை பொழிந்து நமது குடிகளை செழிக்கச் செய்வதுடன் வானவர்கள் பலரும் நமது ஏவல் தொழில்களைப் புரிந்து வருகின்றனரா?

மந்திரி. வ-ம்:—மாவீர புஜபலம் பொருந்திய மன்னவா! யாவும் தங்களின் மனப்படியே நடந்து வருகின்றது.

ஹிரண். வ-ம்:—சமாஷ்! மந்திரி! போகட்டும் அந்த ப்ரம்ம தேவன் நமது தர்பாரினிடமாக வேளை தவராது சாஸ்திரங்களை எடுத்தோதிக்கொண் டிருக்கின்றுனா?

மந். வ-ம்:—அப்படியே தினமும் நடந்தேரி வருகின்றது பிரபூ.

ஹிரண். வ-ம்:—சபாஷ்! சந்தோஷம் அடே சேவக் என தருமை தம்பியை வதைத்த அந்த கள்ளப்பயலாகிய,

வில்லை எடுத்துவாடா என்ற மெட்டு.

ஹரி அகப்பட வில்லையா பிடித்துவந்து
அவனை வதைக்க வில்லையா (ஹ)

பரிவாயவனை யெதிர் பார்த்தேனுகி லிப்போதே
துரிதமுடன் பிடித்து தூக்கியே கிழித்திடுவேன் (ஹ)

ஹிரண். வ-ம்:—சண்டாளன்! என் கண்முன் அவன் கிடைப் பானுகில், அன்னவனை எதிக்குள்ளாக்குவேன் தெரியுமா? பாதகன்! ஆண்மை தத்துவமிருக்குமாயின் எனது தம்பியிடம் காட்டிய சவுரி யத்தை என்னிடம் காட்டமாட்டானு?

சேவகன். வ-ம்:—அரசே! அன்றுமுதற்கொண்டு இதுவரை யில் அன்னவனை எங்கெங்கும் சுற்றியலைந்து தேடிக்கொண்டே இருக்கின்றோம் அவன் இதுவரையில் எங்களின் கண்முன்பாக ஒரு நாளேனும் சிக்கவில்லை.

ஹிரண். வ-ம்:—போகட்டும், என்றைக்கிருப்பினும் ஒரு நாளைக் கேனும் என் கண்முன் சிக்கிக்கொள்வான். அப்பொழுது அன்ன வனை ஒரு கைபார்த்துக் கொள்கிறேன். அடே சேவக்! நீ நமது அரண்மனைக்குச் சென்று எனது அருந்தவச் செல்வனுகிய ப்ரஹ்ற லாதனை யானழைத்ததாக அதிவிரைவில் அழைத்து வருவாய்.

சேவ. வ-ம்:—அப்படியே சித்தம் ப்ரபூ!

[சேவகன் போகிறுன் ப்ரஹ்லரதன் வருகிறுன்.]

ப்ரஹ்லாதன் தரு.

கலிலோ ஸ்மர என்ற வர்ன மெட்டு.

பல்லவி.

ஸ்ரீமந் நாராயணன் திருவடி
தினந்தினம் துதி மனமே வெகு குணமே (ஸ்ரீ)

அநுபல்லவி.

க்ஷீராப்தி சயன சிங்காரன்
திருமகள் சுகுமாரன் அலங்காரன் (ஸ்ரீ)

சரணம்.

ஓமென்றிடும் உயிருள பொருளதின்
ஊக்கமதனை யளிப்பான் தினம்
நாமென்றிடும் நல்லறிவதை யவன்
நமக் களித்தருள் தளிர்ப்பான்
நேமமுடன் தியாகனின் மொழியதை
நிகழ்த்தியே வரங்கொடுப்பான் புகழ் தொடுப்யான் (ஸ்ரீ)

ப்ரஹ. வ-ம்:—பிதா ! அடியேன் நமஸ்கரிக்கின்றேன்.

ஹிரண். வ-ம்:—கல்யாண் ! மைந்தா ! ஏதோ இப்படி என் மடிமீது வந்து அமர்வாய். [அமர்கிறான்.]

ஹிரண். வ-ம்:—குழந்தாய்! பசிதீர பாலமிர்தம் அருந்தினையா?

ப்ரஹ. வ-ம்:—அருந்தினேன் தந்தையே.

ஹிரண். வ-ம்:—சந்தோஷம்! ஏதோ ஒரு முத்தம்தா! (முத்த மிடுகிறான்.) அப்பா எனதருந்தவச் செல்வனே ! யான் சொல்வதைப் போலவே சொல் பார்க்கலாம்.

ஹிரண். வ-ம்:—ஹிரண்ய நமோ !

ப்ரஹ. வ-ம்:—ஹரி நமோ !

ஹிரண். வ-ம்:—என்ன இது ? குழந்தாய் ! அந்த ஹரி யென்பவன் நமது குலத்திற்கே எதிரியாச்சுதே ? அப்பாதகன் தானே உனது சிறிய தந்தையையும் கொன்றான். போகட்டும் இனி அவ் விதமெல்லாம் தெரிவியாதே ! உனை நமது குருவாகிய சுக்ராச்சாரியிடம் ஒப்புவிக்கின்றேன். சரிவர கல்வியை கற்றுக்கொள். அடே! சேவக் ! நீ சென்று, நமது குருவாகிய சுக்ராச்சாரியாரை யானழைத்ததாக அழைத்துவா.

சேவகன். வ-ம்:—அப்படியே மகா பாக்கியம் ப்ரபூ !

[சேவகன் போகிறான் சுக்ராச்சாரி வருகிறார்.]

சுக்ராச். வ-ம்:—அரசே ! அடியேன் வந்தனம்.

ஹிரண். வ-ம்:—ஆசிரியரே ! இதோ இவ்வாசனத்தில் அமருங்கள். (சுக்ராச்சாரி அமர) ஐயா ! இதோ இச்சிறுவன் எனதருமைப் பாலகனுதலால் இன்னவனுக்கு இன்று கல்விகளை கற்பித்து மேலுக்கு வளர்ந்தோங்கச் செய்வீர். இதோ தாம்பூலம் பெற்றுக் கொள்ளுங்கள்.

சுக்ரா. வ-ம்:—அரசே ! மன்னராகிய தங்களின் வார்த்தைக்கும் மறுவார்த்தை யுண்டோ ? அப்படியே செய்வோம் அனுப்புங்கள். குழந்தாய் வா பள்ளிக்குச் செல்வோம்.

[சுக்ராச்சாரி ப்ரஹலாதனை அழைத்து செல்கிறான்.]

ஸீன்:—8.] [இடம்:—கலாசாலை.

கதாநாயகர்:—உபாத்தியாயர், பிள்ளைகள், ப்ரஹலாதன்

[கலாசாலையில் பிள்ளைகள் அனைவரும் அமர்ந்து வாசித்துக்கொண் டிருக்கின்றார்கள். ஒருபுரம் சுக்ராச்சாரி ப்ரஹலாதனுக்கு பாடம் சொல்லுகிறார்.]

சுக்ரா. வ-ம்:—குழந்தாய் ! ப்ரஹலாதா !

அரண்மனையி லிருப்பவளை என்ற மெட்டு.

பல்லவி

சொல்லுவாயடா சுந்தர ப்ரஹலாதனே (சொ)

அநுபல்லவி

நல்ல பிள்ளையல்லவோ நீ நானுரைப்பதைப் போலவே (சொ)

சரணம்

இரண்ய நமோவென இனிவுட னோது
இவ் வுலகினுன் தந்தைக் கிணையொன்று மேது
குறைவு வொன்றும் வாராது குவலமீது
கோபங்கொண்டா லவர் நம் முயிரும் தப்பாது (சொ)

சுக்ரா. வ-ம்:—அப்பா ! குழந்தாய் ! யான் எப்படி சொல்கிறேனோ அதுபோலவே வுரைக்கவேண்டும் தெரிகின்றதா ?

ப்ரஹ. வ-ம்:—அப்படியே சொல்கிறேன்.

சுக்ரா. வ-ம்:—ஹி...ர...ண்...ய...ந...மோ !

ப்ரஹ. வ-ம்:—ஹ...ரி...ந...மோ !

சுக்ரா. வ-ம்:—என்ன என்ன ? எதோ இன்னொரு முறை சொல் பார்க்கலாம் ?

ப்ரஹ. வ-ம்:—ஹரி நமோ !

சுக்ரா. வ-ம்:—ஐயோ ! இது யாருடைய போதனையோ தெரியவில்லையே ? அப்பா ! குழந்தாய் ! இன்னொரு முறை அதுபோல் தெரிவியாதே, உனது தந்தை இச் செய்தியை அறிந்தால் உன்னையும் என்னையும் சிரச்சேதம் செய்துவிடுவார். இப்பொழுது யானுரைப்பதைப்போலவே சொல் பார்ப்போம் ஹி...ர...ண்...ய...ந...மோ !

ப்ரஹ. வ-ம்:—ஹ...ரி...ந...மோ...நாராயணா !

சுக்ரா. வ-ம்:—மறுபடியும் அதுபோலவே தெரிவிக்கின்றாயே ? பிதாவின் பெயரைச் சொல்வதற்கல்லவோ பிள்ளை பிறப்பது? அதை விட்டு எவனோ ஓர் திருட்டுப் பயல் பெயரை தெரிவிக்கின்றனையே ?

ப்ரஹ. வ-ம்:—குருநாதா ! தாங்களுரைப்பது உண்மையே ! ஆயினும், நம்மைப் படைத்தோன் அவனொருவனிருக்க, கேவலமான அரக்கனின் பெயரைக் கூறும்படி யுரைப்பது தங்கள்போன்ற

ஆசிரியர்களுக்கு உசிதமாகுமா? நமையாளுமையன் ஒருவனிருக் கின்றான், அன்னவனே யாதொன்றையும் ஆக்கவும் அழிக்கவும் வல்லவன், அன்னவரின் திருநாமத்தைப் புகழ்ந்து பேசுவோமாயின் சாலோக பதவியிலும் மேலான பதவிகிடைக்குமென்பதற் கைய மில்லை, அதைவிட்டு அற்பனாகிய அரக்கனின் பெயரை கூறுதற்கு எந்தனின் நாவெழவில்லை.

சுக்ரா. வ-ம்:—அப்பா! வேண்டாம்! நீயோ சிறுவன்! இதற் குள்ளாக இத்தகைய வைராக்கியத்தைச் செலுத்துவதில் பயனில்லை ஆதலால் இன்னும் சற்று நேரம் தனியாக அமர்ந்து உனது தோழர் கள் வாசிக்கும் படியான படங்களை கவனிப்பாய்.

[சுக்ராச்சாரி தனியாக ஒருவனுக்கு பாடம் கற்பித்துத் தருகின்றார், பிரஹலாதன் ஒருபுரம் தன்னுடன் வாசிக்கும் சிறு வர்களை சேர்த்துக் கொண்டு பஜனை பாடுகிறான்.]

ப்ரஹ. வ-ம்:—அப்பா! என தன்பார்ந்த தோழர்களே! இது வரையில் இங்ஙகரை பரிபாலிக்கும் அரக்கனின் பெயரை யோதிக் கொண்டே அளவிலாத பாபச் செயல்களை தேடிக் கொண்டீர்கள், ஆயினும், இனியாவது அந்த ஸ்ரீமந் நாராயண மூர்த்தியை பஜித்து பக்தி மார்க்கத்தி லீடுபடுங்கள்.

ராமபஜன ஹோதியா என்ற மெட்டு.

பல்லவி

ஹரிநமோ வென்று பாடுவோம் அருள் தேடுவோம் (ஹ)

அநுபல்லவி

கரியின் முறைக்கிறங்கி கனத்த முதலைதனை
கண்ட துண்டமே புரிந்தார் கருணை தந்தார் (ஹ)
தேவா சுரர்களுக்கு திரட்டி யமிர்தம் தந்தார்
தெய்வ மோகினி போலவே திடமாகவே (ஹ)
ஆலிலை மீதிலவர் அலைகடலில் துயின்றார்
அண்டம்மூவடி யளந்தார் அன்பு நிறைந்தார் (ஹ)
எனது சிறியர் தந்தை இரண்யாக்ஷகனை யன்று
எதிர்த்து கடலில் மடித்தார் இடரொழித்தார் (ஹ)
சுந்தச் சரபக்கவி தியாகராஜ னுரைக்க
சார்ந்து வரமேயளித்தார் தயை மிகுத்தார் (ஹ)

[அனைவரும் ஒன்றாக பாடுகிறார் சுக்ராச்சாரி இதைகண்டதும்.]

சுக்ரா. வ-ம்—அடே! அடே! அடே! மடப்பயல்களே! என்னடா உங்களுக்கு கேடுகாலம் வந்துவிட்டது, அடாப் பாபிகளே! வீணில் எனதுயிருக்கு உலையாகவா நிற்கப் பார்க்கின்றீர்கள்? பயல்

களே! அவரவர் தனித்தனியாக ஒவ்வொரு புரம் அமர்ந்து பாடங்களை வாசியுங்கள் குழந்தாய்! ப்ரஹலாதா! என்னடா இது? நீ கெடுவதல்லாது, பள்ளியிலுள்ள மாணவர்க ளனைவரையுமே கெடுத்து விட்டனையே? போகட்டும், கண்ணே! இப்பொழுதாவது யான் சொல்வதைப் போல் சொல்வாய்,

ப்ரஹ. வ-ம்:—அப்படியே சொல்கிறேனையனே!

சுக்ரா. வ-ம்:—ஓம் ஹிரண்யாய நமா!

ப்ரஹ. வ-ம்:—ஓம் ஹரி நாரயண நமா!

சுக்ரா. வ-ம்:—அடே! இது யென்னடா பெரிய சனியனாக வந்து சேர்ந்ததே? நமது கலாசாலைக்கே பொல்லாத க்ரஹம் பிடித்துக் கொண்டது போலிருக்கின்றதே? சாகும் நாளையில் சங்கரா சங்கரா என்று இப்பாதகன் என்னிடம் வந்து சேர்ந்தானே? நான் இதுவரையில் எவ்வளவோ அசுர குமாரர்களுக்கு கல்வி கற்பித்து வந்தேன் இவனிடம் கஷ்டப் படுவதைபோல் ஒருவரிடமும் கஷ்டப்பட வில்லையே? அடே! ப்ரஹலாதா! இதுதான் உனக்கு கடைசி முறை, யானுரைப்பதைப் போல் உரையாவிடில், உனை அரசனிடம் அழைத்துக் கொண்டுபோய் விட்டு, கடுமையான ஆக்கினைகள் புரியச் செய்வேன் ஜாக்கிரதை எதோ சொல் பார்க்கலாம் ஓம் ஹிரண்யாய நமா!

ப்ரஹ. வ-ம்:—ஓம் ஹரி நாராயண நமா!

சுக்ரா. வ-ம்:—அப்பப்பா! இத்த சனியனுடன் மல்லாடுவதற்கு நம்மால் முடியாது. இப்பாதகனுடன் மல்லாடுவதை விட ஒரு குட்டிச் சுவரிலேனும் முட்டிக் கொண்டாலும் சுகமுண்டு இனி இவனுக்கு எவ்வளவுதான் கஷ்டப்பட்டும் ஒரு சுகமும் இல்லை, இப்பொழுதே இவனை அரசனிடம் கொண்டுபோய் சங்கதியை அறிக்கை யிட்டு விடுவதே நலம், அவ்லாவிடில் நமதுயிருக்கு நஷ்டமேற்படும் அடே! ப்ரஹலாதா! உனது தந்தையின் திரு நாமத்தை யுரைக்க மாட்டனையா!

ப்ரஹ. வ-ம்:—ஐயனே! எல்லாமறிந்த தாங்களே இவ்விதம் வார்த்தை யாடுவது நன்கல்ல? நாம் வீடேற்றக் கூடிய எம்பெருமானின் திருநாமங்களை எத்தனை முறையே யோதினும் அது ஒரு காலம் வீண் போகா, அதைவிட்டு சதா காலமும் நன்மையைத் துறந்து, தீமையிற் சிரந்து, பொய், சூது, கொலை, பாதார இச்சை, முதலியனவைகளை தனது திரேகத்தினுள் நிரப்பி திரியும் ஓர் அரக்கனின் நாமதேயத்தை உரைப்பதால் நாமடையப் போகும் பயன் யாது, அப்படிக்குறைப்போமென யான் நினைப்பினும் என் மனது இடம்தரவில்லை, ஆதலின் என் செய்வேன் சுவாமி!

சுக்ரா. வ-ம்:—பயலே! எது நீ இந்த சிறு பிராயத்திலேயே இவ்வளவு சட்ட கல்விகளை யெல்லாம் பேசத் துணிந்தாய் வா கொலுமுகத்திற்கு, [அழைத்துப் போகிறான்.]

சீன்:—9.] [இடம்:—ஹிரண்யன் தர்பார்.

கதாநாயகர்:—ஹிரண்யகசிபு, மந்திரிகள், சேவகன், சுக்ராச்சாரி, ப்ரஹலாதன், தூதர்கள்.

ஹிரண். வ-ம்:—அடே! சேவக்! நமது பாலன் பள்ளிக்குச் சென்று அதிக நேரமாகின்றது இன்னும் பகல் போஜனத்திற்கு வரவில்லை. நீ சென்று அன்னவனை அதிவிரைவில் அழைத்து வருவாய்.

சேவகன். வ-ம்:—அப்படியே மகா பாக்கியம் ப்ரபூ!

[சேவகன் சென்று மறுபடியும் வருகிறான்.]

சேவகன். வ-ம்:—ப்ரபூ! தங்களின் குழந்தையை நமது குருநாதன் கைப்பிடியாக அழைத்து வருகிறார். காரணம் விளங்கவில்லை.

ஹிரண். வ-ம்:—சின்னஞ் சிறுவன் அத்தகைய குற்றம் என்ன புரிந்திருப்பான்? ஆசிரியர் அவனை அழைத்துவரக் காரணம் யாதாக இருக்கலாம், அருகில் வரட்டும் எல்லாம் தெரிந்துக்கொள்ளலாம்.

[சுக்ராச்சாரி ப்ரஹலாதனை அழைத்து வருகிறார்.]

ப்ரஹ. வ-ம்:—பிதா! அடியேன் நமஸ்கரிக்கின்றேன்.

ஹிரண். வ-ம்:—மைந்தா! கல்யாண்! அமர்வாய் குழந்தாய் பாடங்களை சரிவர படித்து கற்றுக் கொண்டனையா?

ப்ரஹ. வ-ம்:—பிதா! தங்களின் முயற்சியினாலும், எனைப் படைத்த அய்யனின் கிருபாகடாக்ஷத்தை முன்னிட்டும் பாடங்களை சரிவரவே கற்றேன்.

ஹிரண். வ-ம்:—என்ன மைந்தனுரைப்பது உண்மைதானா?

சுக்ரா. வ-ம்:—அரசே! அச் செய்தியை எனைகேட்பதில் யாது பயன் அவனையே கேட்டுத் தெரிந்துக் கொள்ளுங்கள்.

ஹிரண். வ-ம்:—குழந்தாய்! ஏதோ உனது பாடத்தை சொல் பார்க்கலாம்.

ப்ரஹ. வ-ம்:—அப்படியே பிதா!

அடைக்கலமே அடைக்கலமே என்ற மெட்டு.

அரி ஹரியே முர ஹரியே
அகிலாண்ட கோடியான ஆதி லக்ஷ்மி சமேத (அ)
குறைவிலா செல்வமதை கோபாலன் கொடுப்பார்
குற்றம் யாது செய்யினும் கொடும் வினை தடுப்பார் (அ)
அன்று மாபலிதன்னை அடக்கிட முயன்று
அளந்தார் புவியை இரு அடியாக பரிந்து
நன்றல்ல இன்னுமொரு அடிதாரு மென்று
நயந்திட பாதாளத்தில் நருக்கினார் நின்று (அ)

ப்ரஹ. வ-ம்:—எனை யாளுமையனின் செய்கையை காலமும் நாவார துதிக்கினு சற்றுவது மனது சலிப்புருமா?

ஹிரண். வ-ம்:--ஹா! என்ன இது விபரீதம். ஏ! சுக்ராச்சாரி எனது மகனைத் தங்களிடம் கல்வி போதிக்கும்படியாக அனுப்பினுல் இச் சிறு வயதிலேயே அன்னவனுக்கு எனக்கெதிரியின் திருநாமத்தையா போதித்து என் முன் அழைத்து வந்தாய்? சட் துஷ்டா! அடே! இந்த சுக்ராச்சாரிபை இழுத்துக் சென்று இருதுண்டமாக சேதித்து விடுங்கள்.

சுக்ரா. வ-ம்:—(கைகால் உதரலுடன்) மகா ப்ரபூ! யான் எவ்வளவோ முயற்சியுடன் கற்றுத் தந்தும் உனது மகன் அந்த கள்ளப் பயலின் பெயரையே எந்த நேரமும் பூஜித்துக்கொண்டிருக்கின்ருன் தவிர பள்ளியில் வாசிக்கும் சிறுவர்களேயும் இவனது கொள்கைப்படியே கெடுத்துவிட்டான். யானும் இதைக் கூரும்பொருட்டேதான் இன்னவனே தங்களிடம் அழைத்து வந்தேன்.

ஹிரண். வ-ம்:—சரி! சுக்ராச்சாரியாரே! நீ செல்லுங்கள். அப்பா குழந்தாய்! ப்ரஹலாதா.

ஹிரண்யன் விருத்தம். இராகம்-மோகனம்.

எனக்குநீ மைந்தனுக இகமதில் பிறந்திருக்க
மனத்தினில் ஹரியின்பேரை மைந்தனே யுரைக்கப்போமா
உனக்குயான் தந்தையாக உத்தமக இருக்கும்போது
பிணக்குற பகரவேண்டாம் பாலனே அறிவாய்நீயே.

ஹிரண். வ-ம்:—குழந்தாய்! எனக்கு நீ ஜெனித்து எனது பெயரை புகழ்ந்தேற்றுமல், உனது சிறிய தந்தையைக் கொன்ற கள்ளப்பயலாகிய அந்த ஹரியை புகழ்தலாகுமா? வேண்டாம் இனிமீது அவன் பெயரை கனவிலும் நினையாதே, எதோ சொல் பார்க்கலாம். ஹி...ர...ண்...ய...ந...மோ!

ப்ரஹ. வ-ம்:—ஓ...ம்...ஹ...ரி...ந...மோ!

ஹிரண். வ-ம்:—சட்! துஷ்டா!

அடடா அடடா அட என்ற மெட்டு.

பல்லவி.

திருட்டு ஹரியவனே தீவிரமாக வுரைத்த
தீதுள்ள மடப்பயலே தூக்கியே கிழித்தெரிவேன் பார் (தி)

அநுபல்லவி

முறட்டுத் திருமால்தனே மூடனே நீ கண்டதுபோல்
மூழுதுமவனே நம்பி மோசம்போக வேண்டாமடா (தி)

சரணம்.

குருட்டு யுக்தியோ இது குலத்தைப் பழிக்கவந்த
குலத்துரோகியே யெந்தனின் கூர்வாளி
னுலுனே வெட்டியே எட்டி யுதைத்து
சிதைத்து வதைத்து பதைத்திட
குரளைக்கடித்துதிரம் குடிப்பேன் குடிப்பேனடா
சரபக்கவி சொல் தியாக ராஜன் மொழிபோலடா (தி)

ஹிரண். வ-ம்:—பாதகா! அச்சண்டாள ஹரி எனது தம்பி யையும் வதைத்தான், ஈதன்றி இன்னும் பலகொடூரமான காரியாதி களையும் செய்து முடித்தான், அத்தகைய சண்டாளன் எனக்கு சத் ராதியென தெரிந்திருந்தும் அன்னவனை சதமென நம்பித்துதிக் கின்றனையா? குடிகேடா! அவன் என்ன எனைவிட அதிக பல சாலியா? அல்லது மிகுந்த ரோஷமுள்ளவனு? இதுவனைத்தும் சற் றேனும் நினையாது அத்துஷ்டனையே புகழ்ந்து பேசுவாயேல் வீணில் அனேக விதமான தண்டனைகளை யடைவாய்.

ப்ரஹ. வ-ம்:—ஹா! இதென்ன விதி? இப்படியும் தானெ னும் மமதையைக்கொண்டு தவிப்பதாகுமா.

தினந்துதிப்பாய் நெஞ்சே என்றமெட்டு.

பல்லவி.

ஐயையோ தந்தையே அகங்கொள்ளலாமா (ஐ)

அநுபல்லவி.

அகங்கொள்ளலாமா அரும்வினை போமா (ஐ)

சரணங்கள்.

தெய்வ நிந்தினை செய்தால் சேருமே வேணபாவம்
தீங்குகள் பலநேரும் செய்யாதீர் கோபம் (ஐ)
நாராயணனை நீர்தான் நம்பிக்கை துரோகம் செய்தால்
நாளை நமன் நரகில் நருக்கி யுனைப்பிழிவான் (ஐ)
அரிதனை நம்பியபேர் யாரும் அழிந்தோரில்லை
ஆக்கவும் அழிக்கவும் அவனன்றி யாருமில்லை (ஐ)
துளசிங்க மார்பழகன் துருவனை காத்த பூபன்
தியாகராஜன் சங்கீத திரு நந்தகோபன் (ஐ)

ப்ரஹ். வ-ம்:—சர்வலோக சாரண்யராக விளங்கக்கூடிய என தையனின் புகழையெடுத்துரைக்கவென்றால் நம்போன்றவர்களா லியலுமா? தந்தையே! இன்றோடாவது அத்தீயச் செய்கைகளை விடுத்து ஸ்ரீமந் நாராயண மூர்த்தியின் நாமத்தைப்புகழ்ந்து போற் றுங்கள்.

ஹிரண்ய. வ-ம்:—சட்! துஷ்டா! நீயா எனக்கு புத்திப் புகல் பவன் அப்போக்கிரி பயல் கபடமான தொழில் புரியும் கள்ளன்

அவனை நீ துதித்தேற்றுவதுமல்லாமல் என்னையுமா அன்னவனை போற்றும்படியாக தெரிவிக்கின்றாய்? இதோ பார் உனை எக்கதிக்குள்ளாக்குகிறேன். அடே! தூதர்களே!

தூதர்கள். வ-ம்:—அரசே! அடியேனை அழைத்த காணம் யாது?

ஹிரண். வ-ம்:—அடே!

அத்திர வித்தையி னற்றிரு என்ற மெட்டு.

பாதக னனவன் தன்னை யழைத்துபோய்
பாம்புகளை விட்டு தீண்டச் செய்வீர்
சாதனை செய்திடும் சண்டாளன் தன்மீது
சற்றேனும் மனதிறங்கிடாதீர் (பா)

ஹிரண். வ-ம்:—இப்பாதகனை அழைந்துச் சென்று, பாம்புகளை விட்டு கடிக்கச் செய்து விஷமேறி மாளும்படிச் செய்யுங்கள், அப்பொழுது எந்த ஹரி வந்து இவனை காப்பாற்றுகின்றானோ காப்பாற்றட்டும் சீக்கிரம் அழைத்து செல்லுங்கள்.

தூதர். வ-ம்:—அப்படியே மகா பாக்கியம் ப்ரபூ!

[தூதர்கள் அழைத்துச் செல்கிறார்கள்.]

**சீன்:—10.] [இடம்:—சர்ப்ப புத்து.**

கதாநாயகர்:—தூதர்கள், பிரகலாதன், பாம்புபிடாரன்.

[பாம்புபுத்துக்கருகில் பிடாரன் மகடிகுழல் ஊதுகிறான் பிரகலாதன் அதனருகில் அமர்ந்திருக்கின்றான்.]

ப்ரக. வ-ம்:—ஆ! அண்டர்களின் துயரை யகற்றும் ஆதிகேசவா, இவ்வறியாச்சிறுவனின் மீது அரக்கனாகிய எனது தந்தை அடங்காத கோபாவேசத்துடன் அரவத்தால் எனை மடியச்செய்யும்படி ஆக்யாபித்தான்! அறிக்கைப்படியே அன்னவனின் தூதர்கள் இவ்வருங்கானகத்தில் இவ்வடியேனை அழைத்து வந்தனர். யாது குறைக்கும் நீயே தான் கருணைபுரிய வேண்டும்?

ப்ரஹலாதன் தரு.

கதனகுதூகல ராகப்ரியே என்றமெட்டு.

பல்லவி.

ஹரி ராகவா அடியேனைக்காராய்
ஆக்கினை குள்ளானேன் அண்ணலே கண்பாராய் (ஹ)

அநுபல்லவி.

சரியோ இது தயங்குதல் யானே
சங்கு சக்ரபாணி சேயன் பணிந்தேனே (ஹ)

149218

சரணம்.

அரக்கனு மிரண்யன் அய்யனே நிந்தித்தான்
அன்னவன் பெயரை அறையுமென் றுரைத்தான்
திரஸ்கரித்ததால் தீய சர்ப்பத்தாலே
தீண்டிட செய்திட்டான் தியங்குரே னிக்காலே மாலே (ஹ)

ப்ரஹ. வ-ம்:—எத்துயருக்கும் ஈடில்லாத தெய்வமாக தேவரீரிருக்க இவ் விரண்யன் என்னை ஏதுதான் செய்ய முடியும்? இதோ சர்ப்பங்களும் புத்தினுள்ளிருந்து வெளிப்படுகின்றது. ஆயினும், உனதருளிருக்குமாயின் இச் சர்ப்பம் என்னை என்ன செய்கின்றது பார்க்கலாம். அப்படி இவ் வடியேனைத் தீண்டினும் தீண்டட்டும் உனது பாதாரவிந்தத்தையாவது சேருகிறேன்.

[சர்ப்பங்கள் புத்திலிருந்து வெளியில் வருகின்றது ப்ரஹலாதன் அதனருகில் செல்கிறான் சர்ப்பங்கள் அவனைத் தள்ளிவிட்டு அருகில் நிற்கும் ஹிரண்யனின் தூதர்களை சீறுகின்றது.]

தூதர். வ-ம்:—அடே! இந்த சர்ப்பத்தை பார்த்ீரா? அரசன் இவனையல்லவோ சர்ப்பத்தை ஏவி தீண்டச் செய்யும்படி தெரிவித்தான், இந்த பாம்புகள் குற்றவாளியை ஒருபுரமாக தள்ளிவிட்டது கொண்டுவந்த நம்மை யல்லவோ கொல்ல எத்தனிக்கின்றது. ஆஹா! அந்த அரியின் மகிமையே மகிமையடா! நமது அரசனுக்கு இந்த பயலால் என்ன கேடுகள் விளைக்கப்போகின்றதோ தெரியவில்லை.

மற்றொரு தூதன். வ-ம்:—அடேடே! இப்படிதான் இன்னொருமுறை சொல்லப்போறே, அதோடு நம்முயிர் அதோ கதிதான், பைத்தியக்காரா! யார் எக்கதியானால்தான் அதைப்பற்றி நமக்கென்னடா? இவனை அழைத்துபோய் அரசனிடம்விட்டு நடந்த சங்கதிகளை அப்படியே சொல்லிவிட்டால் போச்சுது வாங்கடா போகலாம்.

[தூதர்கள் ப்ரஹலாதனை அழைத்துச் செல்கிறார்கள்.]

**ஸீன்:—3.]** **[இடம்:—சபாமண்டபம்.**

கதாநாயகர்:—ஹிரண்யன், ப்ரஹலாதன், தூதுவர்.

[ஹிரண்யன் சபாமண்டபத்தில் அமர்ந்திருக்கின்றான் தூதர்கள் ப்ரஹலாதனை அழைத்துக்கொண்டு வருகிறார்கள்.]

தூதர். வ-ம்:—மஹாராஜ்! தூதர்கள் நமஸ்கரிக்கின்றோம்.

ஹிரண். வ-ம்:—அடே! என்ன இது? இவனை ஏன் மடித் தெரியாமல் உயிருடன் மறுபடியும் என்முன்பாக அழைத்து வந்தீர்?

தூதர். வ-ம்:—ஐயனே! அச்செய்தியை என்னவென்று கூறப் போகின்றோம், இப்பாலனை அழைத்துச் சென்று அடர்ந்த கானகத் தில் பாம்புகளின் புத்துகளுள்ள இடத்தில் இவனை அமர்த்தி பாம் புப் பிடாரனை மகடி குழலூதச் செய்தோம், அவன் மகடி குழலூத வும் சர்ப்பங்கள் வெளிவரக்கண்டு, இச்சிறுவன் அந்த ஹரியை தியானிக்கவும் சீறிவந்த சர்ப்பங்களெல்லாம் இவனைத் தள்ளிவிட்டு எங்களைத் துரத்தி வருகின்றது யாங்கள் பயந்து இவனை அழைத் துக்கொண்டு ஓடி வந்தோம் ப்ரபூ!

ஹிரண். வ-ம்:—ஹா! என்ன? இச் சிறுபாலன் சர்ப்பத்தை மயக்குதற்கு என்ன தந்திரமறிந்திருப்பான்? போகட்டும், இனி யாவது நமது பெயரைக் கூறுகின்றானா பார்க்கலாம். (ப்ரஹலாதனை நோக்கி) குழந்தாய்! ப்ரஹலாதா! வேண்டாம்! வீணில் பலவித மான கொடிய ஆக்கினைக்குள்ளடங்கி அவதியுறவேண்டாம், தவிர தந்தையின் பெயரை யுரைப்பதற்கல்லவோ தனையன் ஜெனிப்பது ஆதலால்,

## ஹிரண்யன் தரு.

இப்படி புலம்புவதுமேன் என்ற மெட்டு.

பல்லவி

இப்போதாகிலும் நீ சொல்லடா தீர
ஹிரண்ய நமோவென்றிங்கு இனிதுடன் வாய் திறந்து (இ)

அநுபல்லவி

தப்பிதம் மிகவே செய்தான் தம்பியை வதை புரிந்தான்
எப்புவியும் தேடுகிறேன் என்முன் நின்றிடா தொளிந்தான் (இ)

சரணங்கள்.

தந்தையின் வாக்கியத்தை மந்திரமாய்க் கொள்ளாமல்
தடுத்து பேசிட போமோ
அடாது செய்திடில் படாது படுவாய் (இ)
சிறியவனுச்சுதென்று அறிய புத்தியுரைத்தால்
சிறிய தந்தையை கொன்ற
திருட்டு பயல்தனை உரித்த மாக்குராய் (இ)

ஹிரண். வ-ம்:—குழந்தாய்! அஞ்சாதே! யான் உன்னை ஒன் றும் செய்யவில்லை, உனை பாம்புகளை ஏவி கடிக்கச் செய்தேனென்ற கடுங்கோபம் என்மீதிருக்கலாம், யான் உன்னை கொல்வதற்காக வல்ல, உனது சாமர்த்தியத்தைக் கவனிக்கும் பொருட்டே, தவிர,

அந்த ஹரியெனும் கள்ளப்பயல் நமக்கு ஜென்ம விரோதி யல்லவா? அதுவுமல்லாமல், அரக்கர் குலமாகிய நமது மரபினர்க்கு அமரர்குலம் அடிமையல்லவா? அன்னவன் பெயரை நீ யுரைப்பதால் அடையப்போகும் பயன்யாது? ஆதலால் வேண்டாம், இனியாகிலும் எனது பெயரைக் கூறுவாய், ஏதோ சொல் பார்க்கலாம்.

ப்ரஹ. வ-ம்:—பிதா! தாங்களோ! என்னை யீன்றவர், தாங்கள் என்னை எக்கதிக் கிடாக்கவும் தங்களுக் குரிமையுண்டு, இச்சடலத்தை தங்கள் பொருட்டு தத்தம் செய்யவும் இவ்வடியேன் திடங்கொண்டுள்ளேன், ஆனால் மனதை மாத்திரம் தங்களின் விஷயத்தி லீடுபடுத்த என் மனது இடந்தரவில்லை, ஆதலால்,

ப்ரஹலாதன் விருத்தம். இராகம்-செஞ்சுருட்டி.

விண்டிடே னினதுபேரை வீரனே என்பிதாவே
கண்டிலேன் வேறுதெய்வம் கரியமால் தன்னையன்றி
கொண்டிடே னெண்ணம்வேறு கொன்றெனை யெறிந்தபோதும்
மண்டல மாளுங்கோவே மாயவன் என்னைகார்ப்பான்.

ஹிரண். வ-ம்:—அடே! துஷ்டா! என்ன தெரிவித்தாய்?

## ஹிரண்யன் தரு.

காதகி காதகி என்ற மெட்டு.

பல்லவி

பாதகா பாதகா
பாராடா உந்தனை மோதியரைகுவேன் (பா)

அநுபல்லவி.

வாது புரிந்திட வந்து பிறந்தாயோ
சாதனையாய் ஹரி சாதிப்பது மெய்யா (பா)

ஹிரண். வ-ம்:—சண்டாளா! கோரிக்கைக்கு குழந்தையாகப் பிறந்து எங்கள் குலத்திற்கு கோடாரிக் காம்பாகவா முளைத்தாய், குழந்தையாச்சுதேயென்று உனக்கு பலவிதத்திலும் புத்தி மதிகளுரைத்தால், அதுவனைத்தும் உனது செவியினிடமாக கொள்ளாமல், எனக் கெதிரியாகவா தர்க்கித்துப் பேசுகின்றாய், இனி உன்னை எக்காரணத்தைக் கொண்டும் விடுவதில்லை, அடே! தூதர்களே!

தூதர்கள். வ-ம்:—ஏன் ப்ரபூ!

ஹிரண். வ-ம்:—அடே!

## ஹிரண்யன் கண்ணி.

என்பேரைச்சோல்லி மருந்துரைக் கின்ருனு என்ற மேட்டு.

மம்மதைக் கொண்ட மடைய னிவனை
மலைமீதி வேற்றிடுங்கள்
மலைமீதி லேற்றிடுங்கள் மலைமீதி லேற்றிடுங்கள் இவனை
சும்மா விடாமலே சுழற்றி யெறிந்து
சாகச் செய்து வாருங்கள்
சாகச் செய்து வாருங்கள் சாகச் செய்து வாருங்கள் (ம)

ஹிரண். வ-ம்:—அடே! இக் காதகனை அழைத்துச் சென்று, நமது நகருக் கப்புரமிருக்கும் புவனகர மலைச் சிகரத்தி னுச்சியில் இவனைக் கொண்டுபோய், மேலிருந்து தலைக் கீழாகத் தூக்கி எறிந்து வதைத்து வாருங்கள், செல்லுங்கள் சீக்கிரம்.

தூதர்கள். வ-ம்:—அப்படியே! மகாபாக்கியம் ப்ரபூ!

ப்ரஹ. வ-ம்:—பிதா! யான் சென்று வருகிறேன்.

தூதர். வ-ம்:—சட்! நிர்லஜ்ஜா எனையா பிதா என்றழைக்கின்ருய்! அடே, இத்துஷ்டனை அழைத்துச் செல்லுங்கள்.

[தூதர்கள் ப்ரஹலாதனை அழைத்துச் செல்கிருர்கள்.]

**சீன்:—12.]** **[இடம்:—மலையுச்சி.**

கதாநாயகர்:—தூதர்கள், ப்ரஹலாதன்.

[தூதர்கள் ப்ரஹலாதனை மலையி னுச்சியில் நிறுத்திஇருபுரமும் நின்றிருக் கின்ருர்கள்.]

ப்ரஹ. வ-ம்:—வல்லவர்களில் துள்ளலை யொழிக்கும் ஸ்ரீ வைகுந்தனே, அன்ருெரு நாள் பூமா தேவியின் வருத்தத்திற் கிறங்கி வராகமாக சமுத்திரத்தினுள் புகுந்து வாது புரிந்த ஹிரண் யாக்ஷகனை வதைத் தெரிந்து பூமாதேவியின் வருத்தத்தை யகற்றிய ஆதிகேசவா! அன்று திருப்பார்க் கடலில் மேறுகிரியை ஓர் மத்தாக வும், ஆதிசேடனை ஓர் கயிராகவும் கொண்டு தேவர்கள் ஓர் புரமும் அமரர்கள் ஓர் புரமும் வலித்து அமிர்தம் கடையச் செய்து அதின் பொருட்டு அமர்களுக்கும் அசுரர்களுக்கும் நேர்ந்த குறையை அகற்ற ஓர் அழகிய மோகினி ரூபங்கொண்டு அமிர்தம் பகிர்ந்த அய்யனே! அரக்கர்களின் கர்வத்தை அடக்கவும், அமரர்களின் துயரை யொழிக்கவும் ஓர் ஆணி முத்துபோல் அவதரித்துள்ள அச் சுதா! இவ்வடியேன் உனது திரு நாமத்தை ஓதுவதின் பொருட்டு அத் தீதகன் எனை எவ்விதமேனும் வதைபுரிய வேணுமாய் கங்கணம் கட்டிக் கொண்டுள்ளான், ஐயோ! இப் பாலன்! அப்பாதகனி

பெயரை யுரைப்பதால் அவனடையப் போகும் பயன் யாது? யான் இச்சிறு வயதிலேயே இக்கொடியஆக்கினைகளை யெல்லாம் அனுபவிக்க ஆதியில் தங்களுக்கு எப்பழி புரிந்திருப்பேன்? ஹா! எனை இப்பாதக அரக்கனுக்கு ஜெனிக்கச் செய்ததை விட, ஓர் அற்பமான உனது பக்தனுக்கு யான் சுதனாக ஜெனித்திருக்கப் படாதா? அவன் போன்ற அரக்கர்களிடம் அவனது வலுவின் திரத்தைக்காட்டுவானேல் அவன் பெற்றுள்ள வரத்திற்கும் அவனது புஜபல பாராக்கிரமத்திற்கும் ஓர் விதத்தில் ஜெயம் பெறலாம் அதை விட்டு அகில ரக்ஷகனாகிய தங்களை நிந்தித்து அதிக பழிகளை யும், பாவங்களையும் சுமத்திக்கொள்ளுகின்றானே, இப்படியும்வீணில் தெய்வநிந்தனை புரிந்து மடியலாகுமா? ஹா! இம்மலைமீதிலிருந்து என்னை தூக்கிப்போடப் போகின்றார்கள். யான் மடிந்துதங்களின் பாதாரவிந்தத்தைச் சேரப்போகின்றேன். அப்பொழுதாவது பாதக ஹிரண்யனின் மனது குளிருமா? அவனது தொல்லை யொழியுமா? அதின்பிறகாவது தேவரீராகிய தங்களை நிந்தியாதிருப்பானா? ஹா! எனப்பனாகிய ஸ்ரீமந் நாராயண மூர்த்தியே! உனது புகழை இவ் வெளியேன் எதென எடுத்துரைப்பேன் அன்று ஆதிசேடன் மீது ஆனந்த லக்ஷ்மி சமேதராக,

ப்ரஹலாதன் விருத்தம். இராகம்—கேதாரகௌளம்.

பார்க்கடல் மீதிலே பக்ஷமுடனே யன்று
பள்ளிநீர் கொள்ளவிலையோ
பாங்குள தேவர்க்கும் அசுரர்க்கும் அமிர்தமதை
பகிர்ந்துநீ அளிக்கவிலையோ

சீர்கேடன் மாபலியை வாமன ரூபமாய்
சிரப்புடன் காணவிலையோ
சித்தமது மகிழவே மூவடி மண்கேட்டு
சீராக மிதிக்கவிலையோ

வார்த்தை யதற்கிறங்கியே வகையற்ற துருவன்தனை
வந்துரக்ஷிக்க விலையோ
வாதித்த ஹிரண்யாக்ஷதன்தனை வதைத் தன்று
வருத்தமே யொழிக்கவிலையோ

நேர்த்தியாய் உந்தனை நாடியே துதித்தோர்க்கு
நற்பதவி யளிக்கவிலையோ
நிமலனின் மைத்துனா எனதுகுறை யகற்றவே
நம்பினேன் நாராயணா.

[இதற்குள் தூதுவர் ப்ரஹலாதனை தூக்கிக் கீழே எறிகின்றனர். பகவான் ப்ரஹ் லாதனை பிடித்துக் கொள்கிறார்.]

பகவான் கண்ணி.

ஐயா உன்பாதம் போற்றி என்றமெட்டு.

அஞ்சாதே பாலகனே ஆதரிப்பேன் சீலனே
பஞ்சை ஹிரணியனை பற்றறுப்பேன் யானே (அ)

பகவான். வ-ம்:—குழந்தாய்! அஞ்சாதே! அப்பாதகனால் உனக்கு எக்காரணத்தைக்கொண்டும் ஆபத்துகள் ஏற்படாது, இன்னும் அதிசீக்கிரத்தில் வெகு நன்மையை யடைவாய்.

[மறைகிறார்.]

ப்ர. வ-ம்:—ஹா! எனதைய்யனின் கிருபாகடாக்ஷமேகடாக்ஷம், இத்தகைய கருணாநிதியை அக்கசடன் என்ன செய்யப் போகின்றான்?

[இதற்குள் மலைமீதிலிருந்து ப்ரஹ்லாதனை கீழே எறிந்த தூதர்கள் வருகின்றனர்.]

1-வது தூதன். வ-ம்:—அடே! அண்ணே! இதென்ன ஆச்சரியம், இவ்வளவு உயரத்திலிருந்து தலைகீழாக தூக்கி எறிந்தும் மடியவில்லை யென்றால் பற்றும் எவ்விதத்திலடா இவனை நாம் கொல்வது?

2-வது தூதன். வ-ம்:—அந்த அரி இருக்கிறானே அவன் ரொம்ப சத்தியான தெய்வந்தாண்டா, அப்படி தான் முன்னொரு முறைகூட கேழ்விபட்டிருக்கிறேன். நாம்கூட அவனிடம் சேர்ந்து கொண்டா நல்லாருக்குமுன்னு நினைக்கிறேண்டா? உன்னிஷ்டம் எப்படி இருக்குது?

1-வது தூதன். வ-ம்:—அடடே! என்ன இது வீணில் உயிருக்கே ஆபத்து தேடிக்கொள்ளப் பார்கின்றாயே? நம்ப அரசனின் குணம் முழுதிலும் உனக்கே தெறிந்திருக்கு; தவிர, அவரின் சொந்த குமாரனைம்ய அந்த அரியின்பொருட்டு இவ்வளவோகஷ்டத்துக்குள்ளாக்குகிறார் என்றால், நமைப்போலுள்ளவர்களை அவர் என்னதான் செய்யக்கூடாது?

1-வது தூதன். வ-ம்:—ஆமாம், அதுவும் உண்மைதான், நமக்கென்ன, யார் எக்கதியானாலும் நமக்கு சம்பளம் மாத்திரம் சரியாக கொடுத்து விட்டால் போதும், ஆனால் அவருமாத்திரம் இன்னும் சிலநாளைக்குள் என்ன கதியாகப்போகிறாரோ தெரியவில்லை, ஆனால் நாம் இந்த ப்ரஹ்லாதனை அழைத்துக்கொண்டுபோய் அரசனிடம் ஒப்புவித்து நடந்தசேதிகளை தெரிவித்து விடலாம் பிறகு அவரிஷ்டம்.

[தூதர்கள் ப்ரஹ்லாதனை அழைத்துச்செல்கிறார்கள்.]

சீன்:--13.] [இடம்:—ஹிரண்யன் தர்பார்.

கதாநயகர்:—ஹிரண்யன், ப்ரஹலாதன், தூதர்கள், சேவகன்.

ஹிரண். வ-ம்:—அடே! யாரடா சேவக், என்பெயரை யுரையாத சண்டாளனாகிய அந்தப் ப்ரஹலாதனை தூதர்கள் கொன்றெறிந்து வந்து விட்டார்களே,

சேவகன். வ-ம்:—இதோ நான் சென்று தெரிந்துக் கொண்டு வருகிறேன் (திரும்பிப் பார்த்து) அரசே! அதோ தங்களின் பாலனை தூதர்கள் அழைத்து வருகின்றனர்.

ஹிரண். வ-ம்:—என்னடா இது? அப்பாதகனுக்கு எத்தகைய ஆக்கினை விதிப்பினும், அவனுயிர் அவனைவிட்டு பிரிய வில்லையே? இதற்கு என்ன மார்க்கம் செய்யலாம், சரி அருகில் வரட்டும் யாவும் யோசிக்கலாம்.

[தூதர்கள் ப்ரஹலாதனை அழைத்து வருகிறார்கள்.]

தூதர்கள். வ-ம்:—அரசே! தூதர்கள் வந்தனம். ப்ரபூ! தாங்கள் ஆக்யாபித்தபடியே! இவனைமலை உச்சியிலிருந்து தலை கீழாக தூக்கி யெறிந்தோம், எறிந்து விட்டுகீழே யிரங்கி பார்த்தால் இவன் அந்த அரியைப் புகழ்ந்து பாடிக்கொண்டு நின்றிருக்கின்றான், அதைக் கண்டதும் எங்களுக்கு மிகவுமாச்சரிய மேற்பட்டு, செய்தியை தங்களிடம் உரைக்கும் பொருட்டு அழைத்து வந்தோம்.

ஹிரண். வ-ம்:—என்னடா இது? நீங்கள் தெரிவிப்பது மக விந்தையா யிருக்கிறது? போகட்டும் ஒருவேளை இனி மீதாவது நமது நாமதேயத்தைத் தொரிவிக்கின்றானா பார்ப்போம். அப்பா! குழந்தாய்! ப்ரஹலாதா!

ப்ரஹ. வ-ம்:—அடியேன் வந்தனம் தந்தையே!

ஹிரண். வ-ம்:—சந்தோஷம் குழந்தாய்! நீ செய்த குற்றத்தின் பொருட்டு உனையான் தண்டித்த போதிலும், என்மனது நீ மாள்வதென்றால் கிஞ்சிற்றேனும் இடந்தரவில்லை, போகட்டும் இனியாவது திருட்டுப் பயலாகிய அந்த ஹரியை உன் மனதில் நினையாதே, எனது திருநாமத்தை ஓதுவாயாகில் உனக்கு அதிக சௌக்யமுண்டு ஆதலால்,

தாமரை குளத்தில் தண்ணீர் எடுக்கின்ற என்ற மெட்டு.

பல்லவி

இனியாகிலும் எந்தபேரை இயம்புவாய் மகனே (இ)

அநுபல்லவி.

ஏனடா உனக்கிவ்விதி இளம்வயதிலே மடிய (இ)

சரணங்கள்.

பணிந்து பயனென்ன பாலா ஹரிதன்னை
பாக்கியம் பெற்றாயோ பக்ஷமுடனெனை
கனிந்து ஹிரண்ய நமோவென்றாலே உனை
கருதிடாது துயர் கவனமதில் நினை (இ)

ஹிரண். வ-ம்:—ஐயோ! குழந்தாய்! உனையடையும் பொருட்டு எத்தனை வருடங்களாக விரதமிருந்தேன், பிறகு எனது குறையை யகற்ற குழந்தையாக ஜெனித்தும், எனக்கு நேர் விரோதமான பெயரை யுரைப்பதின் பொருட்டல்லவா உனையான் இக்கதிக் காளாக்க நேர்ந்தது, ஐயோ! பெற்றோர்களாகிய எங்களிடம் உனது மழலைச்சொற்களால் வசனித்து.

மேற்படி சரணத்தொடர்.

சிரித்து விளையாடும் சிறிய வயதாச்சே
சேயனே உந்தனின் திரேகம் வாடலாச்சே
அரிஹரி யென்றுநீ அவதியுரலாச்சே
அன்பாக வளர்த்த அருமை யெல்லாம் போச்சே (இ)

ஹிரண். வ-ம்:—மைந்தா! வேண்டாம்! அப்பாதக ஹரியின் பெயரை யுரைத்து பலவிதமான கொடிய ஆக்கினைக்குட்படாதே? அக்காதகன் உனக்கு எப்பொழுதும் சதமல்ல? பெற்றோர்களாகிய எனையும் உனது தாயையும் சதாகாலமும் மனதில் துதிப்பாயேல் உனக்கு சகல பாக்கியங்களும் கிடைக்கும், அச்சண்டாளனால் நீ அடையப்போகும் பயன் யாது? எதோ சொல்பார்க்கலாம்...... ஹி...ர...ண்...யா...ய...ந...மோ.

ப்ரஹ். வ-ம்:—ஐயோ! வேண்டாம்! எனதய்யனாகிய அந்த ஸ்ரீமந் நாராயண மூர்த்தியை தயை கூர்ந்து ஒன்றும் நிந்தியாதீர் அப் பரந்தாமனை எதிர்த்து ஒருவரும் ஜெய முற்றாரில்லை, பஜித்தும் பயன்படாதாரில்லை, ஆதலால்,

## ப்ரஹலாதன் தரு.

காமி சத்ய பாமா என்ற மேட்டு.

பல்லவி.

ஐயா உந்தன் வீரம் ஹரிக்கீடாகுமா (ஐ)

அநுபல்லவி.

ஹரிக்கீ டாகுமா ஆகுமா ஆகுமா எந்தன் (ஐ)

சரணங்கள்.

பெய்யானு லெந்தன் மொழி பூசைபுரிந்து பாரும்
மெய்யன் காக்ஷியை அளிப்பார்
அளிப்பார் அளிப்பார் அளிப்பார் என் (ஐ)
அரசு புரிந்து மென்ன அந்நீதங்கள் செய்து மென்ன
திறமை செல்லாது அறிவீர்
அறிவீர் அறிவீர் அறிவீர் என் (ஐ)
அளிப்பார் வரம் அரனும் அழிப்பார் ஸ்ரீவைகுந்தனும்
அதனை அறிந்த தில்லையா
இல்லையா இல்லையா இல்லையா என் (ஐ)

ஹிரண். வ-ம்:—அடே! பாதகா! மறுபடியுமா உனது மூட நம்பிக்கை உனைவிட்டகலவில்லை, சண்டாளா! பெற்றோர்களுக் கிடர்புரியும் துரோகியே! உனை சிறுவனுச்சுதே யென மயங்கிநிற்ப தால் உன்மனம் போனபோக்கின்படியே மருண்டுத்திருகின்றனையா? துஷ்டா! இதுவே உனது முடிவுகாலம். எவ்விதத்தைக்கொண்டும் இனி உயிர்பெற முடியாதபடிச்செய்கின்றேன். அடே தூதர்களே!

தூதர். வ-ம்:—ஏன் சுவாமி!

ஹிரண். வ-ம்:—அடே! இப்பயலை அழைத்துச்சென்று நமது அரண்மனையின் வெளிப்புரத்தில் ஓர் பெரிய அடுப்பை மூட்டி அதின்மீது ஓர் கொப்பரை ஏற்றி, அந்த

ஹிரண்யன் கண்ணி.

பாறையில் படுத்துறங்க காரணமேன்ன என்றமெட்டு.

கொப்பறை தனிலே நெய்யை காய்ச்சிடுவீரே
கொதிக்க கொதிக்க தனல் மூட்டிடுவீரே
இப்பாதகனை இருவர் தூக்கிடுவீரே
இப்பொழுதே நெய்யிற்போட்டு மடித்திடுவீரே ()

ஹிரண். வ-ம்:—பாதகனை அழைத்துச் செல்லுங்கள்.

தூதர். வ-ம்:—அப்படியே மகாபாக்கியம் ப்ரபூ.

[அழைத்துச்செல்கிறார்கள்.]

சீன்:—14] [இடம்:—அரண்மனை வெளி.

கதாநாயகர்:—ப்ரஹ்லாதன், தூதர்கள்.

[கொப்பரையில் நெய்காய்ந்துக்கொண் டிருக்கின்றது, ப்ரஹ்லாதனை தூதர்கள் அழைத்துவரு கிறார்கள்.]

ப்ரஹ். வ-ம்:—ஆ! பக்தவத்ஸலா! உனை துதித்தேற்றாத பக்தர்களில்லை, உனைநம்பி நன்மை பெறாதாரில்லை, அப்படியெல்லாமிருக்க இப்பாதகன் தேவரீராகிய உமக்கு எவ்வழியில் ஈடாகுவான், கடவுளிடத்தும் சபதம் புரியும் கசடர்கள் இக்காருலகினிடமாக உண்டா ஐயோ! கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே எனும் மொழிப்படி இத்தகைய மூட நம்பிக்கையைக்கொண்டு இம்முரண் ரோடான மார்க்கங்களையும், தெய்வ நிந்தனையையும்,தீயனெனும் நாமதேயத்தையும் கைக்கொள்கின்றானே? பாதகன் இவன்தான் அரக்கர் குலத்திலவதரித்திருப்பினும் நன்மார்க்கத்தி லீடுபடலாகாதா? ஐயோ! இச்சண்டாளனால் சாக்ஷாத் ஸ்ரீமந் நாராயண மூர்த்தியை எதிர்க்கமுடியுமா? ஆ! என்ன செய்வேன்? இவனுக்கு சற்றேனும் கெடுமதி கண்ணுக்குப் புலப்படவில்லையே? இவன் தான் கெடுவதுமல்லாமல் ஊரிலுள்ள பிரஜைகளின் குணத்தையும் இவன்பால் சேர்த்து வைத்துள்ளானே; இதுதான் இப்படியென்றாலோ, எனையும் இக்கசடனின் பெயரைக்கழறும்படியாக கட்டாயப்படுத்துகின்றானே. அதற்கிணங்காததின் பொருட்டல்லவா எனக்கித்தகைய கொடிய ஆக்கினையை நியமித்தான்,ஆயினும் எனதையனாகிய ஸ்ரீமந் நாராயண மூர்த்தி என தருகிலேயே இருக்கையில்,

## ப்ரஹ்லாதன் தரு.

பத்தி பத்தி நிருதாருக்கே என்றமெட்டு.

இதுபெரிதோ இதுபெரிதோ
இரணியனுக்கினை இதுபெரிதோ இ (இ)
எதுவரினும் இணங்கேன் இவன்பெயருரைக்க
எனைபடைத்தோனிவனோ இழிவிலா சிரக்க
பதுமநாபனிருப்பார் எனைகார்க்க
பாவியினுக்கினை பற்றறுக்க (இ)
முடியாது முடியாது
மூடனெந்தனை கொல்ல முடியாது (மூ)
அடியேனின் துயரெலாம் அச்சுதனொழிப்பார்
ஆக்கினை எதுவந்த போதிலும் அழிப்பார்
துடிக்கு மிரணியன்தன் திடமொழிப்பார்
துயரமுறாதுயெனை ஆதரிப்பார் (இ)
அரி ஹரியே அதிகுண நிதியே
ஆருமில்லையேகதி ஆதரியே ஆ

கரிதனை காத்திட்ட கார்முகில் வண்ணா
கபட நாடக அவ தார சம்பன்னா
சிறியேன் தியாகராஜனின் மொழி இன்னாள்
சீர்பெறச் செய்தருள்வாய் மன்னா (இ)

[இதற்குள் தூதர்கள் நெய் கொப்பறையில் ப்ரஹலாதனைத் தூக்கிப்போட்டு விடுகின்றனர். உடனே காய்ந்திருந்த நெய் குளிர்ந்து விடுகிறது ப்ரஹலாதன் கொப்பறையினுள் ளிருந்தபடி பகவானை துதிக்கின்முன்.]

ப்ரஹ. வ-ம்:—ஹா! எனப்பனே! உனது மகிமையை என்னவென்றுரைப்பேன்? ஹா! ஸ்ரீ வைகுந்தவாசனுகிய வர்னமணி மார்பா!

## ப்ரஹலாதன் கண்ணி.

மாதா பிதா நீ கண்ணு என்ற மெட்டு.

வானோர் போற்றும் வைகுந்தா
வருத்த மகற்றும் முகுந்தா
மாணுர் ஸ்ரீ லக்ஷ்மி ஏகாந்தா
மாயாவதார ப்ர பந்தா (வா)

தொகையரா.

யானே சிறுபாலன் ஹரி ஹரி உந்தனை
அன்பாய் துதிக்க வறியேன்
ஏனே யென் மீதின்னும் இறங்காது உன் மனம்
இருந்திடும் விபரந் தெரியேன்

ஷை பாட்டுத் தொடர்.

வாமன ரூப சிங்காரா
வாது சூதே னலங்காரா
தாமதமே னின்னும் வாராய்
தாஷ்டிகனே கெம்பீரா (வா)

தொகையரா.

கோமள நாயகா கோரிடும் பக்தரின்
குறைகளை யகற்றும் தீரா
சாமள தேகனே சண்டாள அரக்கர்களின்
சத்ருவாய் நின்ற வீரா.

ஷை பாட்டுத் தொடர்.

போற்ருத புனிதர்க ளில்லை
போற்றி யழிந்தவ ரில்லை
ஆற்றலுடன் தியாகன் சொல்லை
ஆதரித் தகற்றுவாய் தொல்லை (வா)

தூதர். வ-ம்:—ஐயோ! என்னடா இது? நாம் இவ்வளவு தூரத்திலிருக்கும் பொழுதே இவ்வளவு அனல் வீசுகின்றது, இவனுக்கு மாத்திரம் குளிர்ச்சியாக இருக்கின்றதா என்ன? இவன் ஒன்றும் உபத்திரவப் படவில்லையே, அரி யென்பவன் என்ன அவ்வளவு மகிமை யுள்ளவனு?

2-வது தூதன். வ-ம்:—என்னடா இது எப்பொழுது பார்த்தாலும் பைத்தியக்காரன்போல் உளரிக்கொண்டே இருக்கின்ருயே? அவன் மகிமையுள்ளவனுனல் நமக்கென்ன அல்லது மகிமையில்லாதவனுனல் நமக்கென்ன? அவன் பெயரை நீ யேன்டா அடிக்கடி சொல்லிக்கொண்டே இருக்கிருய்? தான் பெற்ற பிள்ளையையே அவனுக்காக தத்தம் செய்கிருனென்ருல் நம்மை எத்தகைய கதிக்குதான் ஈடாக்கக் கூடாது; வாடா நாம் இவனை அழைத்துபோய் அரசனிடம் ஒப்பிவித்துவிடலாம். பிறகு இவன் கதி எப்படியாவது ஆகட்டும்.

[தூதர் ப்ரஹலாதனை அழைத்துச் செல்கிருர்கள்.]

சீன்:—15.] [இடம்:—மாளிகை.

கதாநாயகர்:—ஹிரண்யன், ப்ரஹலாதன், தூதர்கள்.

[ஹிரண்யன் மாளிகையில் ஓர் புரம் அமர்ந்திருக்கின்ருன் தூதர்கள் ப்ரஹலாதனை அழைத்து வருகிருர்கள்.]

ப்ரஹ. வ-ம்:—பிதா! அடியேன் நமஸ்கரிக்கின்றேன்.

ஹிரண். வ-ம்:—குழந்தாய்! ப்ரஹலாதா! அஞ்சாதே! இதுவரையில் நீ புரிந்த குற்றங்க ளனைத்தும் மன்னித்தேன் ஆயினும், இனிமேலாவது,

எல்லோரையும் போலவே என்னை என்ற மெட்டு.

பல்லவி.

அல்லலின்றி எந்தன் பேரை
அறைகுவாயடா நீ பாலா (அ)

அநுபல்லவி.

பொல்லா ஹரியவன் பெயரை யுரைப்பதால்
தொல்லை யுறலானுய் வல்லவனே இன்று (அ)

சரணம்.

நாராயண னெனும் நாமத்தை விட்டால்
நலம்பெறுவா யெந்தன் நன்மார்க்கத்தில் பட்டால்
சீராகவே இந்த சிம்மாசன மேறி
செங்கோலேந்தி சீராய்
பாராய் பாலனே பாதகனு மவன்
பழிபுரிந்தனன் ஹரியெனும் மூடன்
பக்குவமாய் நீயே பாலனே மனங் குளிர்ந்து
இக்கண மிரண்ய நமோ வென்று யென்முன் (அ)

ஹிரண். வ-ம்:—குழந்தாய்! பெற்றோர்களுக் கன்புபாராட்ட வல்லவா புதல்வன் ஜெனிப்பது; வேண்டாய், வீணில் என்னை வெருத்து பலவிதமான வருத்தத்திற்குள் ளாழ்ந்ததே, எதோ! சொல் பார்க்கலாம் ஹி...ர...ண்...ய...ந...மோ.

ப்ரஹ. வ-ம்:—பிதா!

ப்ரஹலாதன் தரு.

மறப்பேனோ நானே என்ற மெட்டு.

பல்லவி.

உரைப்பேனோ நானே—ஐயா—உலகமதி லுனது பெயரை
உரைப்பேனோ நானே உண்மையி தானே

அநுபல்லவி.

கலக்க மேனோ கொண்டு மனங்
கலங்குகின்றீர் விண்டு அந்த
கார்வண்ணன் தனை துதித்தால் மோக்ஷ லாபமுண்டு—இனி (உ)

சரணம்.

வீணிலே மம்மதை கொண்டு வீரன்போல் துள்ளாதே—நீர்
வெருத்து இந்த உலகையாள ஊக்கமே கொள்ளாதே
நாரணனை பணிவாய்
நற்கதியை பெருவாய்
பாராயணம் புரிவாய்—வெகு
பக்ஷமுடன் தியாகராஜன் பாடி வைத்தான் கனிவாய்—இனி (உ)

ப்ரஹ. வ-ம்:—இப்படிக் கெல்லாமிருக்க உம்மை துதிக்க என் மனதிணங்குமா? வேண்டாம் தந்தையே இனிமீதாவது இத் துர்ச் செய்கையை விடுத்து நற்கதியி லீடுயடுவீராகில் இன்னும் சில காலம் வெகு நன்மையாகவே வாழ்ந்திருப்பீர்.

ஹிரண். வ-ம்:—அடே! சண்டாளா! என்ன தெரிவித்தாய்?

## ஹிரண்யன் ஓரடி.

இந்தவிதமான புத்தி என்ற மெட்டு.

பல்லவி.

பாதகனே எந்தனை நீ பழித்து மிழித்தும் பேச
பாருலகி லுந்தனுக்கு போதனைச் செய்தவரவர்
யார் யார் யார் (பா)
வாதுகளை பேசி மிக வைராக்யம் புரியவந்தாய்
சேதிப்பேன் இருதுண்டாக சீக்கிரம் அப்புரம் செல்வாய் (பா)

சரணம்.

சாதனை யுடனே காதகன் ஹரியை
போதனை செய்து பேதகம் புரிய
தோதென நினைந்து நிதி யுரைக்கின்றாய்
ஏதடா உனக்கு இந்த இருமாப்பு வந்ததாலே
இறக்கச் செய்யாவிடிலே ஹிரண்யன் யானோ பயலே (பா)

ஹிரண். வ-ம்:—எனது குலத்திற்கு ஓர் கோடாலி காம்பாக அவதரித்த குலத் துரோகியே ! நீயோ எனக்கு புத்தி யுரைப்பவன்? சட் ! சண்டாளா ! உனது கொள்கை என்ன முன்னுக்கு வந்து நிற்குமென்பதுன் கருத்தா ? அடே ! தூதர்களே !

தூதர். வ-ம்:—ஏனையனே ?

## ஹிரண்யன் தரு.

சாரங்கந் தன்னிலே சர்ப்பக்கணைதனை என்ற மெட்டு.

துஷ்டனை இக்ஷணம் லஜ்ஜையுட னழைத்தேகி உயிர்
துறந்திடவே யானை தன்னைவிட்டு நாசமாக்கி
திருஷ்டாந்தமாகவே தீவினை மூட்டுங்கள்
திருட்டு ஹரியாலே இறக்கட்டும் பாதகன் (து)

ஹிரண். வ-ம்:—அடே ! சீக்கிரம் அழைத்துச் செல்லுங்கள்.

ப்ரஹ. வ-ம்:—பிதா ! இதுதானோ ஓர் பெரிய ஆக்கினை ? ஆஹா! எனதையனாகிய அந்த சாக்ஷாத் ஸ்ரீ வைகுந்தவாசன் எனக்குத் துணையாக இருக்கும் வரையில் தாங்கள்.

ப்ரஹலாதன விருத்தம். இராகம்-கேதாரகௌளம்.

என்னதான் செய்தபோதும் என்னுயிர் பிரிந்திடாது
துன்மதி தன்னைபூண்டு தெய்வநிந்தனை செய்யாதே
என்னமோ ஏதோயென்று இடும்புகள் நினைக்கவேண்டாம்
உண்மையே உரைத்தேன்கேட்டு உயிருடன் வாழ்குவீரே.

ஹிரண். வ-ம்:—சட் ! மூடா ! பேசாமற் செல். அடே ! இத் துஷ்டனை சீக்கிரம் இழுத்துச் செல்லுங்கள்.

தூதர். வ-ம்:—அப்படியே மகாபாக்கியம் ப்ரபூ !

[தூதர்கள் ப்ரஹலாதனை அழைத்துச் செல்கின்றனர்.]

சீன்:—16.] [இடம்:—வெட்டவெளி காடு.

கதாநாயகர்:—ப்ரஹலாதன், தூதர்கள்.

[ப்ரஹலாதனை தூதர் அழைத்து வருகின்றனர்.]

ப்ரஹலாதன் தரு.

ஆலவாழ் மதுராபுரி என்ற மெட்டு.

பல்லவி

ஹரி நமோ நாரயணு எனை
ஆளும் வேத பாரயணு ஸ்ரீ (ஹ)

அநுபல்லவி

ஆளும்வேத பாராயணு திரு அகிலரக்ஷக பூரணு (ஹ)

தொகையறு

கருணைபுரி நாதனே காயாம்பூ வண்ணனே
கபட நாடக வதாரனே
பெருமை பெரும் வேதனே பார்க்கடல் சயனனே
பங்கஜ பாத தரனே

சரணம்

சர்வலோக சாரண்யனே மிகும்
சாமளரூப புண்யனே
சொர்னமாலை யணிந்தோனே சோதியாதெனை கண்யனே (ஹ)

தொகையறு

அம்புவியில் யானொரு அனாதிபோ லாகினேன்
ஆதரிப்போர் யாருமில்லை
வம்பான மாய்கையில் வருந்துரேன் மூழ்கியான்
வமுத்த வென்றாலும் தொல்லை

சரணத்தொடர்

பாகைன் தனையே ததி கண்
பார்த்தருள் கிருபா நிதி
சீலன் தியாக ராஜனுக்கருள் சேர்த்திடு மதிபதி (ஹ)

ப்ரஹ. வ-ம்:—ஹா ! அகிலமெலாம் போற்றிப் புகழும் அச்சுதா ! அடியேனை அரக்கன் யானையைக்கொண்டு மடித்து வரும்படி ஆக்யாபித்தான், ஹா ! ஆதிசேஷசயனா ! அண்டத்தை அடிகணக்கில் அளர்ந்த ஆதிமூலா ! எனை அப்பாதக ஹிரண்யன் எக்கதிக்குள்ளாக்கினும் ஆக்கட்டும், அன்னவன் பெயுரை மாத்திரம் யானுரைக்கப் போவதேயில்லை, உனது கிருபா நோக்கம் ஒருவேளை மாறியிருக்கில் அப்பாதகன் எனை மடித்தால் மடிக்கலாம், அதோ ! யானையும் குமாளமிட்டு குதித்து ஓடி வருகின்றது. ஆயினும் ஸ்ரீமந் ந்ாராயண மூர்த்தி எனதருகில் இருக்குவரையில் என்மனதார, எத்தகைய,

சத்திய மெங்கும் புகழும் நாடு என்ற மெட்டு.

யானைவந்த போதிலு மஞ்சேனே எனை
யாதரிப்ப துந்தன் பாரந்தானே அடி
யேன்மிக துயரமே யுற்றேனே அன்று
அவனி தனையே அளர்ந்தோனே (யா)

இரண்யன் சபதம் பலியாது மனம்
ஏதுசெய்தாலும் சலியாது ஒன்றும்
இறக்க மில்லாமலே இப்போது எனக்
கிட்ட ஆக்கினையும் தப்பாது (யா)

[யானைவருவதைக் கண்டதும் தூதர்கள் ப்ரஹலாதனை படுக்க வைக்கின்றனர், யானை ஓடிவந்து ப்ரஹலாதனுக் கருகில் நின்றுக் கொள்கிறது.]

தூதன். வ-ம்:—அடடே! இவன் எந்த வழியிலும் மாள்வதாக தெரியவில்லையே ? இவனைக்கொல்ல நமது அரசனாலும் முடியாது அரசனைப் படைத்தவனாலும் ஆகாது. காட்டில் வசிக்கக் கூடிய யானையே இவனைக்கண்டு மயங்கி நின்றுக் கொள்வதென்றால், மற்றும் இவனை யார்தான் மடிக்கக்கூடும்? இவனும் ஒரே பிடிவாதமாக இருக்கின்றான், அரசனும் இவனை எப்படியாவது கொன்று விடுவதென தீர்மானித்திருக்கின்றார், இவனால் நமது அரசனுக்கு என்ன கேடு விளையப்போகின்றதோ தெரியவில்லை !

2-வது தூதன். வ-ம்:—அடே ! உனக்கெத்தனை முறையடா சொல்வது ? எவன் எக்கெதி கெட்டால் நமக்கென்னடா ? இவன் மடிந்தால் போய் சேதியை சொல்லவேண்டியது அல்லாவிடில் இப்பயலை அழைத்துச் சென்று அரசனிடம் ஒப்பிவித்து விடவேண்டியதுதானே நமக்குவேலை; இதைவிட்டு ஆண்டிக்கு அம்பாரம்கணக்கு எதற்காக? வாடா பைத்தியக்காரா ! இவனை அழைத்துச் சென்று அரசனிடம் விட்டு விடலாம்.

[தூதர்கள் ப்ரஹலானை அழைத்துச் செல்கிறார்கள்]

**சீன்:—17.] [இடம்:—ஹிரண்யன் தர்பார்.**

கதாநாயகர்:—ஹிரண்யன், மந்திரிகள், ப்ரஹலாதன், தூதுவர்.

[ஹிரண்யன் சிம்மாசனத்தின்மீது அமர்ந்திருக்கின்றான், தூதுவர் ப்ரஹ்லாதனை அழைத்து வருகிறார்கள்.]

ஹிரண். வ-ம்:—அடே! தூதர்களே! என்ன மறுபடியுமா இப்பாதகனை என்முன் அழைத்து வந்தீர்கள்?

தூதர். வ-ம்:—இவனை படுக்க வைத்து யானைக்கு மதமேற்றி தூரத்தினோம், அப்படி தூரத்தியும், குமாளமிட்டு வந்த யானை, இப் பாலனைக்கண்டதும், மயங்கி பக்கத்தில் நின்றுக்கொண்டது, இனி தங்களின் சூக்ஷி எப்படியோ?

ஹிரண். வ-ம்:—என்னடா இது? காட்டில் வாழக்கூடிய யானையுமா இவனைக்கண்டுமயங்கிவிட்டது, போகட்டும், இனியாவது நமது பெயரை யுரைக்கின்றானு பார்க்கலாம்? அப்பா! குழந்தாய்! பிரஹலாதா! வேண்டாம், போனதெல்லாம் போகட்டும். இதுவே உனக்கு கடைசிமுறை, ஆதலால்,

## ஹிரண்யன் தரு.

தாஜ ராஜ ராஜ ராஜ என்ற மெட்டு.

முடிவாக உனக்குறைப்பேன் மைந்தனே கேளடா—அந்த
முகுந்த நந்த வைகுந்தனே நினைந்தால் மாள்வாய் நீயடா—அன்று
முதியோர்களருளிய முற்றிலும் பழமொழியதனை நீ மறந்தாயோ புவி
முழுதிலு மெந்தனே மகனே நீ போற்றுதவரிலே யறியாயோ
முத்தியே யளிக்க மூடன் ஹரி யுக்தியே தெரியான் யவனே இதை
மெய்யென வேணபேர் துறந்து சென்றார் நம்பியே இல்லறம் சுதனே
முக்கிய மாகவே மிக்கவே நீ இக்கணம் மனதினில் கொள்வாய்
முத்தமி ழுறைத்திடும் நித்தியமாய் பக்தன் தியாகன் மொழி சொல்வாய்
சத்தியமே வெல்வாய்
பக்தியதை தள்வாய் யானும் (மு)

ஹிரண். வ-ம்:—எதோ சொல் பார்க்கலாம்?

ப்ரஹ். வ-ம்:—பிதா ! அப்பரந்தாமனை தூஷித்தபேர்களின் கதியை அளவிட முடியாது. ஆதலால், தாங்கள், கோதை லக்ஷ்மியின் கொழுனனாகிய அக்கோவிந்தனை தங்களின் வாயார நிந்தித்துப்பேசி, முடிவில், அன்னவரின் கோபத்திற்குபாத்திரனாகிவீணில்,

காந்திரிஷி நம்மை கார்த்திடும் சமரசி என்றமெட்டு.

பல்லவி

அழிந்திடாதீர் மன
அகம் பாவம் கொண்டிப்போது (அ)

அநுபல்லவி.

அழிந்திடாதீர் வீணில்
பழிதேடாதீர் நாளை
ஒழித்திடாதீர் மன
அகம் பாவம் கொண்டிப்போது (அ)

சரணங்கள்

ஆதியில் அரக்கர்குலம் வேருடனறுத்தவன்
அன்று உந்தன் தம்பியரை ஆழியில் ஒழித்தவன்
வேதியன் போல் மூவடிமண் வாங்கியே செழித்தவன்
வைகுந்தனும் வர்ம
மொழித்திடும் நாரணனல் (அ)

ப்ரஹ். வ-ம்:—தந்தையே! அப்பரமாத்மாவின் திருவிளையாடல் இது மாத்திரமல்ல, அன்று முதலையின் வாயில் கால் சிக்குண்டு கலங்கிநின்ற,

ஷை சரணம்.

கஜேந்திரன் துயர்தவிர்க்க கருடன் மீது வந்தவன்
கள்ளபத்மா சூரன்தன்னை காதலாலெரித்தவன்
புஜபலமது மிகுக்க பூமியோர் புகழ்ந்தவன்
பூபாலனும் நல்ல
புண்டல்ரிகாக்ஷ தனல் (அ)

ப்ரஹ். வ-ம்:—ஐயோ ! இது மாத்திரமா ? அந்த எம்பெருமானின் செய்தியை எளியேன் எடுத்துரைக்கவெனில் இப்பொழுதுதான் போதுமா ? அண்டிவரும் அமரர்களுக்கும், அடியார்களாகிய தாசர்களுக்கும், அனேக விதத்தில் வரமளித்து ஆதரித்தார், ஆண்மை படைத்து அதமம் புரிந்தோரை அரைக்ஷணத்தில் அவர்களின் அகம்பாவத்தையொழித்து அடக்கிவைத்தார், இதுதான் இப்படி யென்றாலோ, திருப்பார்க்கடலினிடமாக,

மேற்படி சரணம்.

அரவமீதிலே துயின்ற ஹரி நாராயணமூர்த்தி
அங்கையினில் சங்கு சக்ரம் அணிந்தி லகிடும் கீர்த்தி
சரபக்கவி தியாகராஜன் சாற்றிடும் தமிழ் நேர்த்தி
சாதிக்காதே உந்தன்
சௌளரியங்கள் செல்லாதே (அ)

ஹிரண். வ-ம்:—அடே! பெற்றவர்களை தூஷிக்கும் பெரும் பேயனே! என்ன தெரிவித்தாய்?

## ஹிரண்யன் தரு.

சோரத்தனமாய் காவல்மீறி என்ற மெட்டு.

ஆரவாரமாய் நேரில் பேசிய
அதிக ப்ரசங்கியே நில்லு நில்லு நில்லு
அகங்காரமோ ஹரியவன் தந்த
அகங்காரமோ (ஆ)
தந்தையை நிந்திக்க வந்து பிறந்தாயோ
தாக்ஷண்ய மில்லாத பாவி பாவி பாவி
தருதலையே தாய் தந்தை சொற்கேளா
தருதலையே (ஆ)
பெற்றவர் பெயரை பெரிதும் நினையாமல்
பேசவந்தாய் முழு மூடா மூடா மூடா
போதனையோ பொல்லா ஹரியிட
போதனையோ (ஆ)

ஹிரண். வ-ம்:—துஷ்டப் பயலே! எவ்வளவோ நன்மார்க்கமாக உனக்கு போதிப்பினும், கழுதைக் குபதேசம் காதிலுரைப்பினும் அபயக்குரலன்றி அதன் சுபாவமாறுமோ என்பதற் கிணங்க, அந்தக் கள்ளப் பயலின் புகழ்ச்சியையா எடுத்து வர்னித்துக்கொண்டிருக்கின்றாய்? இனி உனை எக்காரணத்தைக் கொண்டும் விடுவதில்லை; அடே தூதர்களே! இப்பாதகனை இந்த க்ஷணமே கைப்பிடியாக இழுத்துச் சென்று ஊருக்கு வெளிப்புரமிருக்கும் கற்பாரை மீது நிருத்தி, சற்றேனும் தயை தாக்ஷண்யத்தை கவனியாது.

விட்டிடு விட்டிடு தங்கையே என்ற மெட்டு.

பல்லவி.

வெட்டுவீர் வெட்டுவீர் தூதரே இவன்
வல்லுயிரை தொல்லுலகில் அல்லலுறவே இரண்டாய் (வெ)

அநுபல்லவி

மட்டு மரியாதை யில்லா மடைய னிவனை நீங்கள்
கட்டாரி கொண்டு இப்போதே கழுத்தை ஓரே வீச்சாக (வெ)

சரணம்

வாதனையுடனே பத்து மாதமே சுமந்துபெற்ற
தாயை மனதிலெண்ணு திருந்தான் இந்த
பூதலமெல்லாம் புகழும் போர்வீரன் யெனது பேரை
புகன்றிடாமலே குற்றம் புரிந்தான்
ஆதலாலிவன் பொருட்டு அணுவேனு மஞ்சிடாதீர்
சாதனையாய் தியாகன் தமிழ் சாற்றியது போலவே நீர் (வெ)

ஹிரண். வ-ம்:—இழுத்துச் செல்லுங்கள். இனிமீது கிஞ்சிற்றேனும் தயை தாக்ஷண்யம் கவனியாதீர்?

தூதர். வ-ம்:—அப்படியே! மகா பாக்கியம் ப்ரபூ!

[தூதர்கள் அழைத்துக் செல்கின்றனர்.]

சீன்:—18.] இடம்:—வட்டப்பாறை.

கதாநாயகர்:—தூதர்கள், ப்ரஹலாதன்.

[தூதர்கள் ப்ரஹலாதனை வட்டப்பாறை மீது நிறுத்தி கத்தியை நோக்கிக் கொண்டிருக்கின்றனர்.]

ப்ரஹ. வ-ம்:—குறையுளார் மனத்துட்புகும் குணகரா! குரூர நெஞ்சமுள்ளவர்களை குத்திவதைக்கும் குணசேகரா! காதகனுகிய எனது தந்தை தன் கொடியச் செய்கையைக் கொண்டு எனைக் கொல்லும்பொருட்டு பலவிதமான ஆக்கினைகளையும் தொடுத்தான், அவ் வரக்கினைகள் முற்றும் உனதருளைக்கொண்டே சூரியனைக்கண்ட பனிபோல் விலகியது, அப்படி விலகியும், முடிவாக கட்டாரிக் கொண்டு என் கழுத்தை இருகூராகச் செய்யும்படி ஆக்யாபித்தான். ஐயோ! என்ன செய்வேன், மலைபோன்ற இவ்வீரர்களின் கரத்திற்கு யானென்ன துரும்பல்லவா? எனை வதைப்பதின் பொருட்டு இவர்களுக்கென்ன சிரமம் ஏற்படப்போகின்றது, அப்படி எனதுயிர் போயினும் இதனுல் தேவரீராகிய உமக்குதான் என்ன பெருமை ஏற்படப் போகின்றது? அடே! பாதக ஹிரண்யா! நீதானு எனது தந்தை! யானு உனக்கு மைந்தன்! பெற்றவனும் இத்தகைய பெருங் கொலையைச் செய்யத் துணிவானு? சண்டாளா! உனை துதிப்பதின் பொருட்டு யானென்ன பயனடையக் கூடும், நீ உலகைதான் ஆள்

வதற்கு அறிந்துக் கொண்டனேயே தவிர, ஒருவரை இரக்ஷிக்கவும் அல்லது அடக்கவும் என்ன திறமையுற்றாய்? பாதகா! உனைக் கொண்டாடுவதென்றால் இப்பிறவியிலுமில்லை, இனியான் பிறக்கும் ஏழுபிறப்பிலுமில்லை, இதை மாத்திரம் உனதுள்ளத் திடமாக மதித்து வைத்துக்கொள்.

## ப்ரஹலாதன் தரு.

சிறைவாயில் நின்றழுதாள் என்ற மெட்டு.

பல்லவி.

ஆதி சொரூப கேசவா ஹரி ராகவா (ஆ)

அநுபல்லவி

நீதிசேர் மூலா நித்ய கோபாலா
நீலமேகனே சாமளா நிகழ் பூபாலா (ஆ)

தொகையறு

சேதித் திடவெனை தீதக னிரணியன்
தெரிவித்தான் ஏது செய்வேன்
வாதித்து அவனுடன் வழக்காட எந்தனால்
வள்ளலே ஆகுமோதான்
பாதிமதி தரித்திட்ட பரமனின் மைத்துனு
பச்சைநிற மேனி யழகா
அனாதி போலாகினேன் அறியாத சிறுவன்யான்
அண்டமே அளர்ந்த மாயா

ஷை அநுபல்லவித்தொடர்

தீதிலா வேதா திவ்ய பொற்பாதா
தியாகராஜனின் சங்கிதா துதித்தேன் வாதா (ஆ)

1-வது தூதன். வ-ம்:—அடேய்! போதுண்டா, என்னமோ சும்மா சும்மா யாரையோ கூப்புட்டுக்குனே இருக்கிறே? இப்படியே ஏமாத்திட்டு நாளை ஓட்டிடலாம்னு பார்க்கிறியா? உங்கொப்பனை ஏமாத்துவதுபோல எங்களை ஏமாத்தாதே.

ப்ரஹ. வ-ம்:—ஐயா! யாரையுமே ஏமாத்துவதாக யான் கருதவில்லை, ஏனெனில் எனது தந்தையின் ஆக்கினையின் பொருட்டு யான் மடிந்தபோதிலும், நற்கதியி லீடுபடவேண்டாமா? அதற்காகவே எனை இப்புவியினிடமாக அவதரிக்கச் செய்த அந்த ஸ்ரீமந் நாராயணனை தியானித்தேன், இனி உங்களுக் கொன்றும் தடையில்லை உங்கள் மனப்படியே எனது சிரத்தை சோதித்துச் செல்லுங்கள்,

தூதர்கள். வ-ம்:—சரி அசையாமல் அப்படியே நில்.

[ப்ரஹலாதன் கரத்தைக் கூப்பிநிற்கின்றான், தூதர்கள் கத்தியினால் கழுத்தை வெட்டுகின்றனர் கத்தி முறிந்து பொடி பொடியாக போகிறது.]

1-வது தூதன். வ-ம்:—என்னடா இது ? இவன் விஷயத்தில் நடப்பதெல்லாம் மிக ஆச்சரியமாகவே இருக்கிறது ? பாம்பை விட்டால் நம்மை துரத்திக்கொண்டு வந்தது, மலைமீதிலிருந்து உருட்டினதற்கு யாரோ ஒருவன் வந்து பிடித்துக் கொண்டான், நெய் கொப்பரையில் போட்டால் சூடுஅண்டாமல் குளிர்ந்து விட்டது, யானையைத் துரத்தினால் இவனைக்கண்டதும் மயங்கி நின்றுவிட்டது, இப்பொழுது கத்தியால் வெட்டினதற்கு கத்தி பொடி பொடியாக முறிந்து விட்டதே இவ்வளவு ஒத்தாசை புரிந்தால் யாருக்கு தான் தகப்பன் தயவு வேண்டும்.

ப்ரஹ. வ-ம்—ஐயா ! வீணில் என்மீதில் மனஸ்தாபிக்க வேண்டாம், அதாவது, உங்களின் அரசனால் என்னை,

### ப்ரஹலாதன் தரு.

கன்னி வள்ளியே உந்தன் என்ற மெட்டு.

எக்கதி புரிந்த போதும் என்னுயிர் போகாதையா
இறைவன் கருணை புரிவார் ஹிரணியனின்
இருமாப் பழிக்க வருவார் இதின்
இயற்கையை மனதினில் மதித்திடா துஷ்டனை
பகைத்திட காலமே பரிவுடன் நேர்ந்ததால்
பங்க மதிக மடைவான் படுநரகில்
பாவி யவனும் விழுவான் (எ)

ப்ரஹ. வ-ம்:—கொடுமதி கண்ணுக்குப் புலப்படாமல் கெருவித்துத் திரியும் எனது தந்தைக்கு காலம்நெருங்கி விட்டது, அதின் பொருட்டுதான் எனை இக்கதியிலெல்லாம் ஈடுபடுத்த நினைந்தான். ஆகலால், வீணில் நீங்கள் சிரமப் படுவதில் பயனொன்றுமில்லை, என் பொருட்டு யாதுயிழை யிருப்பினும் மன்னித்து எனை யழைத்துச் சென்று எனது தந்தையிடம் சேர்த்து விடுங்கள், அன்னவரால் கூடுமான வரையில் பார்க்கட்டும்.

2-வது தூதன். வ-ம்:—ஆமாண்டா ! அதுவும் உண்மைதான் யார் எக்கதியானால் நமக்கென்ன போச்சுது, இவன் சொல்வதைப் போலவே இவனை கொண்டுபோய் விட்டுவிடலாம்.

1-வது தூதன். வ-ம்:—ஆமாண்டா. அதுதான் சரியான யோசனை, அடே ! ப்ரஹ்லாதா வாசெல்வோம்.

[ப்ரஹலாதனை அழைத்துச் செல்கிறார்கள்.]

ஸீன்:—19.] [இடம்:—கூடம்.

கதாநாயகர்:—ஹிரண்யன், லீலாவதி, ப்ரஹ்லாதன், தூதர்கள். சேவகன், நரசிம்மமூர்த்தி.

[ஹிரண்யன் தனது அரண்மனை கூடத்தில் அமர்ந்திருக்கின்றான், தூதர்கள், ப்ரஹ்லாதனை அழைத்து வருகின்றனர்.]

தூதர். வ-ம்:—மஹாராஜ்! வந்தனம்.

ஹிரண். வ-ம்:—அடே! இப்பாதகனை மறுபடியும் என் இங்கு அழைத்து வந்தீர்கள்?

தூதர். வ-ம்:—அரசே! தங்களின் உத்திரவுபடியே, உங்கள் மைந்தனை கொண்டுபோய் வட்டப்பாறை மீது நிறுத்தினோம் அதற்குள் எவனோ|ஹரியாம் அவனையே துதித்துக்கொண்டு நின்கின்றான், நாங்கள் கூடிய வரையில் கத்தியினால் வெட்டிப்பார்த்தோம், எங்கள் கத்திதான் பொடிபொடியாக போகிறதே தவிர இவன் கழுத்திற்கு ஒரு பின்னமும் ஏற்படவில்லை, பிறகு யாங்கள் பிரமித்துப் போய் தங்களிட மழைத்து வந்தோம்.

ஹிரண். வ-ம்:—என்ன? உண்மைதானா; போகட்டும் ஒரு வேளை நாம் இவனை இவ்வளவு கதிக்காளாக்கினதின் பொருட்டு இப்பொழுதாவது நமது மனதுபோல் நடக்கின்றானா பார்ப்போம்.

ப்ரஹ். வ-ம்:--பிதா அடியேன் நமஸ்கரிக்கின்றேன்.

ஹிரண். வ-ம்:—குழந்தாய்! ப்ரஹ்லாதா! கல்யாண்! அஞ்சாதே, நீயோ புத்தியிலும், அழகிலும், சிறந்து விளங்குகின்றாய், நீசெய்த பலவிதமான குற்றங்களுக்காக உனக்கு பலகொடிய ஆக்கினைகளை அமைத்தபோதிலும் என்மனது உனைக்கொல்ல சற்றேனும் சம்மதிக்கவில்லை தவிர,

## ஹிரண்யன் தரு.

தேடிவந்தேனே வள்ளிமானே என்றமெட்டு.

பல்லவி

மைந்தா இதென்னடா துன்மார்க்கம் அந்த
மாயனீவானோ மகா யோக்யம் பாக்யம் (மை)

அநுபல்லவி.

மானயீன மதியது போக்கியே
வானவர்களை வருத்தமேலாக்குவான் (மை)

மகுடங்கள்.

பட்டிப்பயல் மறைந்துயென் தம்பியை
திட்டத்துடன் திருடவனும் கொன்ருன் (மை)
முக்கிய மாகவே பெற்றவர் பெயர்தனை
இக்கண முறைத்திடில் முத்தியடைகுவாய் (மை)

சரணம்.

எந்தன் பெயர் கூருவாய்
இடரொழிந்து தெருவாய்
ஏனடா உனக்கே இந்த விதிவசம்
காணடா தியாக ராஜனினுபதேசம் (மை)

ஹிரண். வ-ம்:—குழந்தாய்! போனதெல்லாம் போகட்டும். ஏதோ இப்பொழுதாவது எனது பெயரைச்சொல் பார்க்கலாம்.

ப்ரஹ். வ-ம்:—தந்தையே! தாங்கள் எத்தனையோ முறை எனை பரீக்ஷித்துப்பார்த்தீர், தாங்களால் எனக்கு யாதொரு குறைவும் ஏற்படவில்லை, இதுவனைத்தும்தாங்களே ஆழ்ந்து யோசிப்பீரேல் இதின் மர்மம் தங்களுக்கு நன்கு துலங்கும். ஆதலால், தங்களுக்கும், எனக்கும், இவ்வீரேழு பதினான்கு லோகத்திற்கும் கர்த்தனாக விளங்கக் கூடிய எனதையனை,

தயவிலாத தேன்ன வஞ்சம் என்றமெட்டு.

பல்லவி.

தெய்வ நிந்தனை செய்யாதே பெரும்
தீதுக்குள்ளாகாதே துள்ளாதே (தெ)

அநுபல்லவி

வையகம் புகழும் நாதன்
வாமன ரூபன் சாமள தேகன்
வைகுந்த வாசகன் ஸ்ரீ நாராயணன் (தெ)

சரணம்.

கைதனில் சங்கு சக்ரம் கருத்துடன் தரித்தார்
கர்வித்த அசுரர்கள் குலத்தை வேரறுத்தார்
வையமே மூன்றடியாய் அளந்தார் (நீ)
வாது சூதிலாத போதகன்
வழுவிலா தியாக ராஜன் வாசகன் (தெ)

ப்ரஹ. வ-ம்:—பரந்தாமனுகிய ஸ்ரீ பக்தவத்சலனை துதிப்போர்கள், புவியிலிருப்பினும் சுகஜீவியாக இருக்கலாம். அல்லது இறந்தாலும் சொர்க்க பதவியைச் சேரலாம், இதைவிட்டு வீணில் அப்பகவானை நிந்திப்பதில் பயனென்றுமில்லை. இதை மாத்திரம் தாங்கள் திட்டமாக நினைத்துக் கொள்ளுங்கள்.

ஹிரண். வ-ம்:—அடே! என்ன தெரிவித்தாய்? மறுபடியுமா அந்த மடையனைத் துதித்துப் புகழ்ந்து பேசுகின்றாய், பாதகா! இனி உனை எக்காரணத்தைக் கொண்டும் விடுவதில்லை.

## ஹிரண்யன் தரு.

ஆடி உன் பேரூர் சோல்லடி என்ற மெட்டு.

பல்லவி.

பாரடா உனை பதைக்கப் பதைக்க வதைப்பேன்—அடே
பாவியே உனதுடலை மேவியே கிழித்தெறிவேன் (பா)

அநுபல்லவி

ஆரடா உனக்கு இந்த ஆதரவதை கொடுத்தார்
கூரடா எனக்கிப்போதே குலத்துரோகி யானவனே (பா)

சரணம்.

சேரடா எமனுலகம் தந்திடுவேன் விஷமதை
ஜென்மப் பகையாளியே நீ இந்த க்ஷணமே
கோரடா ஹரியவனை கதித்து யென்முன் வரட்டும்
குதித்து மிதித்துடலை வதைத்துக் கிழித்தெறிவேன் (பா)

ஹிரண். வ-ம்:—சண்டாளா.

ஹிரண்யன் விருத்தம். இராகம்-மோகனம்.

போகட்டு மென்றுஉன்னை புவிமீது விட்டுவைத்தால்
மாகெட்ட மடையன்தன்னை மனதினில் துதித்துக்கொண்டு
நீகெட்ட வழியேசார்ந்தால் நான்சகித் திருப்பேனோடா
ஆகட்டும் பார்ப்பேனேர்கை அறிவிலா அசடேமூடா.

ஹிரண். வ-ம்:—அடே! துன்மார்க்கா! உனை எக்காரணத்தைக்கொண்டும் இனி விடுவதில்லை, அப் பாதகன் ஹரியே உனைக் காப்பாற்றட்டும். இதோ உனதாவியை என் மனதார போக்கிவிடுகிறேன் பார். அடே! சேவக்!

சேவ. வ-ம்:—ஏன் அரசே!

ஹிரண். வ-ம்:—அடே! நீ சென்று நானழைத்ததாக லீலாவதியை அதிசீக்கிரத்தில் அழைத்து வருவாய்.

சேவ. வ-ம்:—அப்படியே மஹா பாக்கியம் ப்ரபூ!

[சேவகன் போகிறான், லீலாவதி வருகிறாள்.]

லீலா. வ-ம்:—ப்ராணபதி! வந்தனம். யாது காரணம்பற்றி இவ்வடியாளை இவ்விட மழைப்பித்தீர்?

ஹிரண். வ-ப்:—பெண்ணே! இப்பாதகனை பார்த்தனையா? நமது பெயரை யுரைக்கும்பொருட்டல்லவோ நாமிவனை யீன்றெடுத் தோம், இச்சண்டாளன் அதைவிட்டு அந்த கள்ளப்பயலிருக்கின் றானே அந்த ஹரி, அவன் பெயரைச் சொல்கின்றான்.

லீலா. வ-ப்:—செல்வமே! ப்ரஹலாதா! ஏனடா உனக்கு இந்த துர்மதி! நமது தந்தையை விடவும் புஜபல மிகுந்ததோர் இப்பூவினிடமாக இருக்கின்றார்களா? வேண்டாமடா, எதோ சொல் பார்க்கலாம்?

ப்ரஹ. வ-ம்:—தாயே! நமது குலமோ கேவலமாகிய அரக்கர் களின் குலம், அதிலும் தந்தையோ? வீண்வாது, பாதகம், காதல், பொய், சூது, நிந்தனை, கொலை, முதலிய விதங்களனைத்தும் குடி கொண்டவர், ஆதலால் அன்னவர் பெயரைக் கூறவும் என் மனது இடந்தரவில்லை, தவிர, இன்னவரின் பெயரை யுரைப்பதைவிட சாக்ஷாத் ஸ்ரீமந் நாராயணமூர்த்தி திருநாமத்தை தியானிப்பேனுகில் அன்னவர் பொருட்டு எத்துன்பம் வரினும் இன்பமேயொழிய என் மனதில் கிஞ்சிற்றேனும் துன்பம் ஏற்படாது அம்மணி.

ஹிரண். வ-ம்:—அடி! என்ன? உனது மகனுடன் ஆசையாக கொஞ்சிக் குலாவிக்கொண்டிருக்கின்றனையோ? ஜாக்கிரதை, இப் பய லுக்கு இதோ (கிண்ணத்திலிருக்கும் விஷத்தை லீலாவதியின் கரத் தில் தந்து) இந்த விஷத்தை இவனுக்களித்து இப்பாதகனை மடி த்துவிடு சனியன் இவனோடு ஒழியட்டும்.

லீலா. வ-ம்:—ஐயோ! நாதா! குழந்தைக்கா நஞ்சை யளிப் பது? ஹா!

[கீழே விழுந்து எழுந்து பாடுகிறாள்.]

## லீலாவதி தரு.

ஆனை அழைத்தவண்டி என்ற கிளிக்கண்ணி மெட்டு.

கோபிக்கவேண்டா மெந்தன் கோழுணரே பாலன்மீது என் நாதா
ஆபத்து நேருமையா
அருஞ்சுதன் மாள்வானையா (கோ)

ஹிரண். வ-ம்:—அடி! இப்பயலுக்கா நெஞ்சிறக்கம் கொள்ளு கின்றாய். இப்பாதகனை யாரென நினைத்துக்கொண்டாய்.

ஹிரண்யன் மேற்படி மெட்டு.

மைந்தனிவ னல்லவடி மாவிரோதி யாகுமடி மயிலே
எந்தனுயிர்க்கேமனடி
இவனை வைக்கலாகாதடி (மை)

லீலா. வ-ம்:—நாதா ! நமது குழந்தைக்கென்ன அப்படி வயது அதிகமாகிவிட்டது ? பாலனே சிறுவன், சிறுபிள்ளை பயமறியாது யென்பதற்கிணங்க குழந்தை விளையாட்டாக வார்த்தையாடுகிறான், அவனுக்கு உமைபோன்ற,

லீலாவதி ஷை மெட்டு.

உற்றவயது வந்தால் உத்தமரே நம்சுதன்
சொற்புத்திபோல் நடப்பான் என்நாதா
சூரதீரனு யிருப்பான் (கோ)

ஹிரண். வ-ம்—பெண்ணே ! நீ யுரைப்பதும் உண்மைதான் அதுபோலவே பூவுலகில் நடப்பதும் சகஜம்தான், ஆனால் இத்துஷ்டனின் விஷயத்தில் அப்படிக் கொன்று நினையாதே, ஏனெனில்,

ஹிரண்யன் ஷை மெட்டு.

விளையும் பயிர்முளையில் விபரந் தெரியுமடி
தலையட்டும் இவனெழிந்தால் மயிலே
துன்ப மொழியுமடி (மை)

லீலா. வ-ம்:—நாதா ! என்னசெய்வேன் ? அரிய தவத்தில் ஐரெண்டு திங்களாக அடிவயற்றில் சுமந்து இவ்வரும்புவியினிடமாக அதிக சிரமத்துடன் ஈன்றெடுத்த எனதுமனம் கலங்குகின்றதே ? ஐயோ ! எவ்விதம் விஷத்தை யளிப்பேன் ஹா !

லீலாவதி ஷை மெட்டு.

பால்மணம் மாறிடாத பாலனுக் கெவ்விதம் யான்
தாலமேல் விஷமளிப்பேன் என்நாதா
தயக்கத்தினுல் மெலிந்தேன் (கோ)

லீலா. வ-ம்:—நாதா ! இச்சமயம் விட்டுவிடுங்கள், இன்னொரு முறை இவன் தங்களின் வார்த்தைக்கு முரண்பாடாக தெரிவிப்பானேல் தங்களின் மனப்படியே செய்து விடுங்கள்.

ஹிரண். வ-ம்:—அடி ! என்ன தெரிவித்தாய் ? மகனெனும் அன்பை மாறுதலாக காட்டுகின்றனையா ? ஜாக்கிரதை ! இத்துஷ்டனைப் பிடித்துள்ள சனி உனையும் துடர்ந்துக் கொள்ளும், ஒழுங்காக நடந்துக்கொள்.

லீலா. வ-ம்:—நாதா ! அடியாள்மீது கோபியாதீர் தங்களின் கருத்தின்படியே மகனுக்கு நஞ்சளிக்கின்றேன். அடே ! குழந்தாய் என்னடா செய்வேன் ; உனதாயுள் இப்படியும் முடியுமா ? ஐயோ ! உன்பொருட்டு யாது சொல்லினு தந்தை கோபித்துக் கொள்கின்றாரே ? ஹா !

## லீலாவதி தரு.

ஐயோ நான் மதிமோசம் போனேனே என்ற மெட்டு.

பல்லவி

மகனே இது உன்விதி வசந்தானு
மறப்பேனு இருப்பேனே உயிர் தரிப்பேனே (ம)

அநுபல்லவி.

மாளவோ நீ பிறந்தாய்—புத்தி—சாலியாக இருந்தாய் (ம)

சரணங்கள்.

அகதிபோல் நின்றேனடா
அருந்துணே யற்றேனடா
மிகதுயர் பெற்றேனடா
மீளொணு துயரிதடா (ம)
மன்னன்மிக கோபத்தால்
மடிக்கவென்றார் விஷத்தால்
கண்மணி இவ்விபத்தால்
கலக்கங் கொண்டேன் மனத்தால் (ம)

கற்பிற் சிறந்த எந்தன் கனியே என்ற மெட்டு.

பல்லவி

தாயே மனது வருந்தாதே
தயங்காதே மயங்காதே புலம்பாதே (தா)

அநுபல்லவி

மாயன் துணே இருக்க மனக்குறை ஏது
மம்மதை கொண்டால் தந்தை யொன்றுமாகாது
காயமழிவதற்கு காரணமேது
கலக்கமுராதே யெந்தன் தாயே
சொன்னேன் சேயே ததிநீயே அறிவாயே (தா)

ப்ரஹ. வ-ம்:—அம்மணி! இக்காயம் நமக்கு சதமல்ல, இச் சடலமோ? நீர்மேற் குமிழி, நிலேயற்றகாயம், அதிலும் ஒருவன் எப்பொழுது ஜெனித்தானே, அப்பொழுதே அடுத்தபடியில் மரணமென்பது ஒன்று அவனே விடாது துடர்ந்துக்கொண்டே இருக்கின்றது ஆதலால்,

ப்ரஹலாதன் மேற்படி பாட்டுத் தொடர்.

பிறந்தபோதே உயிர் பிரிவது உண்மை
பொம்மலாட்ட மாய்கை யொழியினும் நன்மை
சிரப்புள்ள என் தந்தை துறந்தாரே தன்மை
சீதரன் என்னேவிடா ரம்மா
ஏனே சும்மா துய ரம்மா ஆகா தம்மா (தா)

ப்ரஹ. வ-ம்:—தாயே ! யானே வயதில் சிறுவன்தான், எனது தந்தையோ புஜபல பராக்ரமத்திற் சிறந்த வரப்ரசாதித்தான் ஆனல், யான் சிறுவனுக இருப்பினும்,எனைக் கோடாலி கொண்டு கொந்திய போதும் எனதுயிர் பிரிவதற்கு ஒரு நியாயமுமில்லை.ஏனெனில் எனக்கோ, அந்த ஹரி நாராயணன் கிருபை பூர்வமாக இருக்கையில்,

ப்ரஹலாதன் மேற்படி பாட்டுத் தொடர்.

அரக்கரா லென்னுயிரை அழித்திடப் போமா
அமரர்களின் மகிமை அப ஜெயமாமா
வரம்பெற்று மென்னபயன் வாழ்விது வாமா
வழுத்தும் தியாகராஜன் சங்கீதன்
நவ நீதன் அருள் போதன் வைகுந்த நாதன் (தா)

ப்ரஹ. வ-ம்:—அம்மணி ! இது விஷயத்தில் தாங்கள் கிஞ்சிற்றேனும் வருந்தாதீர் இவ்விஷம் தங்களிடமிருக்குவரையில்தான் பாஷாணமாக இருக்கும் இவ்வடியேனின் கரத்தில் அதை யளித்ததும், இச் சிறியேனுக்கு ஸ்ரீமந் நாராயண மூர்த்தியின் திவ்ய கிருபா கடாக்ஷமிருக்குமாயின் அமிர்தமாக மாறிவிடும் தாங்கள் யாதொன்றுக்கும் அஞ்சாது இப்படி கரத்தில் தாருங்கள்.

[லீலாவதி ப்ரஹலாதனின் கரத்தில் விஷத்தையளிக்கவும்; அது பாலாகமாறிவிட அதை குடித்து விடுகிருன் லீலாவதி மூர்ச்சையாக கீழே விழுகிருள்.]

ஹிரண். வ-ம்:—ஹா ! என்ன இது ? இத்துஷ்டன் எக்காரியமாயினும் மகா துணிகரமாகவே செய்கின்றுனே ? அடே ! பாதகா ! போகட்டும் இப்பொழுதாவது என்ன தெரிவிக்கின்றுய் ? உனதாயுள் உயிருடனிருந்து இந்த ராஜ்யத்தை எனக்குப் பின் நீ பரிபாலிக்க வேணுமானல் ஒன்றும் தடையின்றி எனது பெயரைச் சொல்.

ப்ரஹ. வ-ம்:—ஐயா ! உனது பெயரை யுரைப்பதற்கு யாதொரு நியாயமுமில்லை. தவிர, யான் அப்படி உரைக்கவென்றுலும் எனது நாவெழவில்லை, ஆதலால் இன்னும் தாங்கள் எவ்வளவு தந்திரங்களை அறிவீரோ அது விஷயங்களை யெல்லாம் என்மீது தொடுத்து எனை மடித்து விடுங்கள்.

ஹிரண். வ-ம்:—அடே! துஷ்டா!என் கரத்திற்கு நீ எவ்வளவு? பாவம் நாம் யீன்றெடுத்த மைந்தனுதலால் கொல்லப்படாதென யோசிக்கின்றேனே யொழிய வேறில்லை.

ப்ரஹ. வ-ம்:—தந்தையே ! என் குற்றங்க ளனைத்தும் க்ஷமிக்கும்பொருட்டு கார்மேக வண்ணனுகிய ஹரி நாதனிருக்கும் வரையில் எனை தாங்கள் கொல்ல முடியாதுயென்றறிந்துக்கொள்ளுங்கள்.

ஹிரண். வ-ம்:—அடே ! பயலே ! என்ன தெரிவித்தாய்? அந்த ஹரியை உன்னால் காட்டமுடியுமா ?

ப்ரஹ. வ-ம்:—ஆஹா ! அப்படியே தாங்கள் பார்க்க வேணு மானால் காட்டுதற்கு சித்தம்.

ஹிரண். வ-ம்:—என்ன ? எங்கே யிருப்பான் அவன், சொல் பார்க்கலாம் ?

ப்ரஹ. வ-ம்:—ஆஹா ! அப்படியே தெரிவிக்கின்றேன்.

## ப்ரஹலாதன் கண்ணி.

நாதசங்கீத போன் மணி மண்டபம் என்ற மெட்டு.

தூணிலு மிருப்பார் ஹரி நாதன்
துரும்பிலு மிருப்பார் ஹரி நாதன்
வானிலு மிருப்பார் ஹரி நாதன்
வல்லமை யழிப்பார் ஹரி நாதன்
வருள் போதன் அருள் போதன்
வைகுந்தம் காட்டிடும் ரகு நாதன் (தூ)
மனதிலு மிருப்பார் ஹரி நாதன்
மனையிலு மிருப்பார் ஹரி நாதன்
குணத்திலு மிருப்பார் ஹரி நாதன்
கூடத்தி லிருப்பார் ஹரி நாதன்
குரு நாதன் குரு நாதன்
கொடிய வினையைத் தீர்க்கும் ரகு நாதன் (தூ)

ப்ரஹ. வ-ம்:—பிதா ! இது மாத்திரமா ? இன்னும் அவரிருக்கு மிடங்களை தெரிவிக்கின்றேன் கேளுங்கள்.

ப்ரஹலாதன் மேற்படி மெட்டு.

கதவிலு மிருப்பார் ஹரி நாதன்
கனவிலும் வருவார் ஹரி நாதன்
பதவியை யளிப்பார் ஹரி நாதன்
பாவத்தைத் தொலைப்பார் ஹரி நாதன்
புகழ் வேதன் புகழ் வேதன்
பாலன் தியாகராஜன் போற்றும் ரகு நாதன் (தூ)

ப்ரஹ. வ-ம்:—தந்தையே ! எனதையன் இதோ இந்த தூணி லுமிருப்பார், துரும்பிலுமிருப்பார், துன்புற்றவர்களின் மனத்துள்ளு மிருப்பார், கூடத்திலுமிருப்பார், பக்தர்களின் நெஞ்சத்திலும் பாவி இருப்பார், எளியவர்களின் உள்ளத்திலுமிருப்பார், எதிரிகளுக்

கெதிரியாக எங்கும் நிறைந்திருப்பார், எனது நெஞ்சத்திலுமிருப்பார், உனதுள்ளத்திலுமிருப்பார், அன்னவரிராத இடம் ஒன்றில்லை.

ஹிரண். வ-ம்:—அடே இந்தத் தூணி லிருக்கின்றுனு ?

ப்ரஹ. வ-ம்:—ஆஹா ! பிதா ! அதற்கென்ன சந்தேகமா ?

ஹிரண். வ-ம்:—உண்மையாக இருப்பானு ?

ப்ரஹ. வ-ம்:—சத்தியமாக இருப்பார் தந்தையே !

ஹிரண். வ-ம்:—ஆனுல் இதோ பார்க்கின்றேன்.

[தூணை உதைக்கின்றுன், நரசிம்ம மூர்த்தி பிராப்தமாகின்றுர்.]

ஹிரண். வ-ம்:—அடே ! என்தம்பியைக் கொன்ற கள்ளப் பயலே ! உனைதான் அநேக நாட்களாக தேடிக்கொண்டிருந்தேன் இப்பொழுது நீயே நேரில் வந்து சிக்கிக்கொண்டாய் ? குழந்தாய் ! ப்ரஹலாதா ! நமக்குப் பகையாளியாக நிற்கும் இந்த துஷ்ட ஹரியை என் கண்முன்பு காட்டினையே ! நீதான் எனதன்பிற்குகந்த புத்திரன்.

[இதற்குள் ஹிரண்யனை ப்ரஹலாதன் பிடித்துக்கொண்டு.]

ப்ரஹ. வ-ம்:—பிதா ! வேண்டாம் பரமாத்மாவிடம் தாங்கள் முன்னிற்கமாட்டீர். ஆதலால், அன்னவரின் பாதத்தில் விழுந்து மன்னிப்பு கேட்டுக் கொள்ளுங்கள்.

ஹிரண். வ-ம்:—மைந்தா ! இக் கள்ளப்பயலுக்கா நாமஞ்சுவது ஒரே அரையில் இவனை ஒழித்து விடுகிறேன்.

[ஹிரண்யன் நரசிம்ம மூர்த்தியுடன் யுத்தம் செய்கின்றுன் நரசிம்மமூர்த்தி ஹிரண்யனிடம் யுத்தம் செய்துக் கொண்டே வீட்டு வாயர்படியருகில் கொண்டு வருகிறுர்.]

சீன்:—20.] [இடம்:—அரண்மனை வாயற்படி.

கதாநாயகர்:—ஹிரண்யன், நரசிம்மமூர்த்தி, ப்ரஹலாதன், ப்ரம்மா, நாரதர், லக்ஷ்மி.

[நரசிம்ம சுவாமிக்கும் ஹிரண்யனுக்கும் யுத்தம் நடக்கின்றது ஹிரண்யனை நரசிம்ம சுவாமி தூக்கி மடிமீது வைத்து கிழித்து விடுகிறுர், தேவர்கள் முதலானோர் வருகின்றனர்.]

நரசிம். வ-ம்:—அப்பா ! குழந்தாய் ! உனது தந்தையை நீ அரக்கனென நினையாதே ! அவன் எனது அரண்மனையின் காவலனுகிய துவார பாலகன், ஆதி சாபத்தின்பொருட்டு, அவன் இவ்விதம் ஜெனித்து எனை தூஷித்தான். எனது கடமையை யான்

செலுத்திவிட்டேன் உனது தந்தையின் ராஜ்யத்தை நீ பட்டம் சூட்டிக்கொள்.

ப்ரஹ. வ-ம்:—ஐயனே! தங்களின் சித்தமெப்படியோ! அவ்விதமே அடியேனின் சித்தமும்.

[நரசிம்மசுவாமி ப்ரஹலாதனுக்கு மகுடஞ் சூட்டுகின்றார்.]

மங்களம். மங்களம். மங்களம்.

கலிலோ ஸ்மர என்ற மெட்டு.

பல்லவி

ஆராதார பொருளெனு மைங்கரன்
அடிமலர் மங்களமே தங்கிடுமே (ஆ)

அநுபல்லவி.

ஓராறு முகசர வணபவ
வேல் முருகோன் தனக்கும் வள்ளியம்மைக்கும் (ஆ)

சரணம்

அரிமாலயன் அரன்திரு பகவதி
அருங்கலை வாணியற்கும் நல்ல
திருமாமலர் மீதமர் பூமகள்
திருவடி மலர்தனக்கும்
கிருபையுடன் கவியிசை யோதிய
கீர்த்தி சேரழகருக்கும் தியாகனுக்கும் (ஆ)

சுபம்! சுபம்!! சுபம்!!!

சரித்திரம் முற்றிற்று.

149218
சென்னை-600 008.

செல்வரங்கன் பிரஸ், சென்னை.

# டிராமா சரித்திரங்கள்.

| | | | |
|---|---|---|---|
| வள்ளித் திருமணம் | 0 | 4 | 0 |
| லவ குச | 0 | 4 | 0 |
| அல்லி அர்ஜுனா | 0 | 4 | 0 |
| சம்பூர்ண அரிச்சந்திரா | 0 | 4 | 0 |
| சாவித்திரி | 0 | 4 | 0 |
| கோவலன் சரித்திரம் | 0 | 4 | 0 |
| ஞானசவுந்தரி டிராமா | 0 | 4 | 0 |
| ராமதாஸ் சரித்திரம் | 0 | 4 | 0 |
| கபீர்தாஸ் சரித்திரம் | 0 | 4 | 0 |
| சக்குபாய் | 0 | 4 | 0 |
| நந்தனார் சரித்திர டிராமா | 0 | 4 | 0 |
| நல்லதங்காள் டிராமா | 0 | 4 | 0 |
| பவளக்கொடி சரித்திரம் | 0 | 4 | 0 |
| தூக்குத்தூக்கி டிராமா | 0 | 4 | 0 |
| பாரிஜாத புஷ்பஹாரணம் | 0 | 4 | 0 |
| சகுந்தலா சரித்திரம் | 0 | 4 | 0 |
| சிறுத்தொண்ட பத்தன் டிராமா | 0 | 4 | 0 |
| மார்க்கண்டேயர் சரித்திரம் | 0 | 4 | 0 |
| சாரங்கதரன் டிராமா | 0 | 4 | 0 |
| டம்பாச்சாரி சரித்திரம் | 0 | 4 | 0 |
| குலேபகாவலி | 0 | 4 | 0 |
| பாதுகா பட்டாபிஷேகம் | 0 | 4 | 0 |
| துளசிதாஸ் சரித்திரம் | 0 | 4 | 0 |

1-A
1-3

இன்னும் அநேக சரித்திரங்களும் அச்சிட்டு வருகிறேன்.

நாடகாசிரியர்:—

**V. A.** தியாகராஜ செட்டியார்.

1/105 பிராட்வே, மதராஸ்.

Selvarangan Press, Madras.